Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

SATURDAY, OCTOBER 2, 2021

சனிக்கிழமை ஒக்டோபர் 02, 2021 | ஒளி: 07 கதிர்: 116 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | விலை ரூ.10



## 2022க்கான செலவு விவரம் வெளியானது

அரசாங்கத்தின் அடுத்த வருடத்துக்கான செலவு 2 ஆயிரத்து ஐநூற்று 5 பில்லியன் 346 மில்லியன் 558 ஆயிரம் ரூபாயாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அடுத்தாண்டு வரவு- செலவுத் திட்டத்துக்கான நிதியொதுக்கீட்டு சட்டமூலம் வர்த்தமானியில் வெளியாகியுள்ளது. அச்சட்டமூலம் அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. 2022 ஜனவரி 1ஆம் திகதி முதல் 2022 டிசெம்பர் 31ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கான செலவாகவே இத்தொகை மதிப்பிடப்பட்டுள்ளது.

வாகனம், சொத்துகளை

# சுவீகரிக்க வேண்டாம்


- 6 மாதங்களுக்கு அமல்: அஜிட் நிவாட் கப்ரால் அதிரடி
- ஆறு மாத வழிகாட்டு வரைப்படமும் வெளியீடு

நுண் பொருளாதார மற்றும் நிதி அமைப்பு ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கான ஆறு மாத வழிகாட்டு வரைப்படம் நேற்று (01) வெளியிடப்பட்டதுடன் அதிரடியான அறிவிப்புகள் சிலவும் விடுக்கப்பட்டுள்ளன.

இலங்கை மத்திய வங்கியில் நேற்று (01) நடைபெற்ற நிகழ்வில், மத்திய வங்கியின் ஆளுநர் அஜிட் நிவாட் கப்ரால் வரைபடத்தை வெளியிட்டு, முக்கிய பல அறிவிப்புகளை விடுத்தார். அடுத்த ஆறு மாதங்களில் நுண் பொருளாதாரம் மற்றும் நிதி அமைப்புகளின் ஸ்திரத்தன்மையை உறுதி செய்யும் நோக்கில் புதிய பொருளாதாரத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது என மத்திய வங்கியின் ஆளுநர் இதன்போது தெரிவித்தார்.

அனைத்து முக்கிய துறைகளையும் உள்ளடக்கியே இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களின் கடன் மற்றும் கடன் வட்டிக்கு நிவாரணமளிப்பதற்காக 15 ஆயிரம் மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தனியாள் வெளிநாட்டு நாணய கணக்குகளான வதிவற்றோர் வெளிநாட்டு நாணய கணக்குகள் (NRFC) மற்றும் வதிவோர் RFC வெளிநாட்டு கணக்குகள் தொடர்பில் எந்த மாற்றமும் இல்லை. தொடர்ச்சி P2



## ஸ்ரீ ஹர்ஷ வர்தன் ஷ்ரிங்லா யாழ். திருமலைக்கு விஜயம்



வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகேயின் அழைப்பின் பேரில் இந்திய வெளியுறவுச் செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ வர்தன் ஷ்ரிங்லா, 2021 ஒக்டோபர் 2 - 5 வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார். தொடர்ச்சி P2

## இராணுவத்திடம் கையளித்த எமது சிறுவர்கள் எங்கே?

■ விஜயரத்தினம் சரவணன், சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினர் 1669ஆவது நாளாக தொடர்ச்சியாக கவனயீர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

இந்நிலையில் பன்னாட்டு சிறுவர் நாளான நேற்று (01) கொவிட் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.


முல்லைத்தீவு - மாங்குளம் பிரதான வீதியில் அமைந்துள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் முன்பாக இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.



குறிப்பாக இவ்வார்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் "எங்கே எங்கே உறவுகள் எங்கே? பன்னாட்டு விசாரணையே எமக்கான தீர்வு, இலங்கை இராணுவத்திடம் கையளித்த எமது சிறுவர்கள் எங்கே?, தொடர்ச்சி P2

## இஸ்ரேல் யுவதியிடம் அமைச்சர் குசலம்

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் இஸ்ரேல் யுவதியை பார்வையிட்ட சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, அந்த யுவதியிடம் நலம் விசாரித்தார். தொடர்ச்சி P2



## உலக வங்கியிடமிருந்து 500 மில்லியன் டொலர்கள்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் தொலைநோக்கு கொள்கை திட்டத்திற்கு அமைவாக 100,000 கிலோமீற்றர் வீதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தை உலக வங்கி வரவேற்றுள்ளது எனத் தெரிவித்த நெடுஞ்சாலை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, இலங்கைக்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க உலக வங்கி முடிவு செய்துள்ளது என்றார். தொடர்ச்சி P2



## பட்டினியற்ற...

'பட்டினியற்ற மரங்கள் நிறைந்த' தார்மிக நாடொன்றைக் கட்டியெழுப்புதல், சிறுவர் சுற்றாடல் பாதுகாப்பு படையணியை தாபித்தல், ஒரு இலட்சம் பலா மரங்களை நடுதல்' எனும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், சர்வதேச சிறுவர் தின நிகழ்வு பெரியநீலாவணைப் பிரதேசத்தில் நேற்று (01) நடைபெற்றது. கல்முனை வடக்கு பிரதேச செயலக சிறுவர் மற்றும் மகளிர் பிரிவினர் ஏற்பாடு செய்த இந்நிகழ்வில், பிரதேச செயலாளர் ரி. ஜெ. அதிசயராஜ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். பெரியநீலாவணை புலவர்மணி ஷரிபுத்தீன் மகா வித்தியாலயத்தில், பாடசாலையின் அதிபர் எம்.எம். முஹம்மட் நியாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாணவர்கள் பலா மரக் கன்றை நாட்டி, சிறுவர் தின தேசிய வேலைத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர். ( படமும் தகவலும்: ஏ.எல்.எம். ஷினாஸ்)

## கொழும்புக்கு பயணித்த பஸ் சிக்கியது

அநுராதபுரத்திலிருந்து கொழும்புக்கு பயணித்துக் கொண்டிருந்த தனியார் பஸ், கெக்கிராவ மடாட்டுகம என்னுமிடத்தில் இருந்த இராணுவ மற்றும் பொலிஸ் வீதிச் சோதனை சாவடியில்வைத்து, தொடர்ச்சி P2





## ஆராய்ந்து பார்க்கவும்

**அனைத்து துறைகளுக்கும் கொவிட் செயலணி வலிறுத்து**

நாடு திறக்கப்பட்டுள்ள நிலையில், உரிய சுகாதார வழிகாட்டுதல்கள் பின்பற்றப்படுகின்றனவா என்பது தொடர்பில், அந்தந்தத் துறையினர் ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று, கொவிட்-19 தொற்றொழிப்பு ஜனாதிபதி செயலணி வலியுறுத்தியது. தொடர்ச்சி P2

## மட்டக்குளி இராணுவ முகாமின் அதிகாரிக்கு விளக்கமறியல்

மட்டக்குளி இராணுவ முகாமில் கட்டளை அதிகாரியாக செயற்படும் லெப்டினன் கேர்னல் சமந்த திலக்கரத்ன உள்ளிட்ட சந்தேக நபர்களை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் லோச்சனீ அபேவிக்ரம நேற்று (01) உத்தரவிட்டுள்ளார். தொடர்ச்சி P2

## சுப்பிரமணியன் சுவாமி கொழும்பு வருகிறார்



இந்திய அரசியல்வாதியும், பொருளாதார நிபுணரும், புள்ளிவிவர நிபுணருமான சுப்பிரமணியன் சுவாமி, இம்மாதம் கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளார். தொடர்ச்சி P2


## பெருந்தோட்டத் தொழில் துறையில் இருந்து தற்காலிகமாக விலகுவோம்

■ மலையக நிருபர்கள்



தோட்ட அதிகாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சந்தர்ப்பமொன்றை வழங்கவேண்டும். தோட்ட அதிகாரிகளின் கோரிக்கை தொடர்ச்சியாக புறக்கணிக்கப்படுமானால் பெருந்தோட்டத் தொழில் துறையில் இருந்து தற்காலிகமாக விலகுவோம் என்று சிலோன் தோட்ட அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. தொடர்ச்சி P2

## அரச சேவையை முன்னெடுக்க 15 காரணங்கள் உள்ளடக்கம்



அரச சேவையை முன்னெடுப்பது தொடர்பான சுற்றுநிருபமானது, 15 காரணங்களை அடிப்படையாக வைத்து, வெளியிடப்பட்டுள்ளது என, பொதுச் சேவைகள், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

நாடு மீண்டும் திறக்கப்பட்டுள்ள நிலையில், அரச சேவையை முன்னெடுப்பதற்காக அத்தியாவசிய சேவையாளர்களை மாத்திரம் அழைக்குமாறு நிறுவன பிரதானிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2

## "அடித்து கொன்று சுட்டுப் போட்டான்கள்"

**தாய் கதறல்; வழக்கு ஒத்திவைப்பு**

■ கனகராசா சரவணன்

எனது பிள்ளையை அடி அடியென அடித்துக் கொன்று போட்டு, சுட்டுப் போட்டான்கள் இந்த கொடுமையைக் கேட்க ஆளில்லையா? எங்களுக்கு நீதி வேண்டும் என்று படுகொலை செய்யப்பட்ட மகாலிங்கம் பாலசுந்தரத்தின் தயார் கதறியழுதார்.

இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் வீட்டுக்கு முன்னால் அவரது மெய்பாதுகாவர் மேற்கொண்ட துப்பாக்கி சூட்டுச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட மெய்பாதுகாவலரின் வழக்கு விசாரணை நேற்று (01) நடைபெற்றது. தொடர்ச்சி P2



## கௌதாரிமுனையில் 100 ஏக்கர் வயல் காணி பகிர்ந்தளிப்பு

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைமைப் பொறுப்பை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்ற ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு நேற்று (01) பூநகரி கௌதாரிமுனை மக்களுக்கு வயல் காணிகள் வழங்கப்பட்டன. தொடர்ச்சி P2



## பூஜித், ஹேமசிறியிடம் குற்றப்பத்திரிகை கையளிப்பு

போதிய சாட்சியங்கள் இருந்த போதும் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களை தடுக்க நடவடிக்கை எடுக்காததன் ஊடாக, கடமைகளை அலட்சியம் செய்தமை மற்றும் கொலை செய்தமை தொடர்பில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் குற்றப்பத்திரிகைகளை கையளித்துள்ளது. தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

## உலக வங்கியிடமிருந்து 500 மில்லியன் டொலர்கள்

இந்த திட்டத்தின் ஊடாக வெற்றிகரமான பெறுபேறுகள் கிடைத்துள்ளதால், கிராமங்கள் மற்றும் நகரங்களை இணைக்கும் வகையில் பாதுகாப்பான மற்றும் காலநிலைகளுக்கு ஏற்ற வகையில் வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காகவே இந்த உதவி வழங்கப்படவுள்ளது.

கிராமங்கள் மற்றும் நகரங்களை இணைக்கும் திட்டமாகவும், விவசாயத்தை மேம்படுத்துவதற்கான ஒரு முன்னோடி திட்டமாகவும் செயல்படுத்த உலக வங்கி இந்த தொகையை இலங்கை வழங்குவதாக அமைச்சர் மேலும் கூறினார்.

இந்தத் திட்டத்தின் கீழ் முழு நாட்டையும் உள்ளடக்கிய சுமார் 3,000 கிலோமீற்றர் நீளமான வீதிகளை நிர்மாணிக்க எதிர்பார்க்கப்படுகிறது. அத்தோடு கிராமப்புறங்களில் விவசாய பயிர் சேகரிப்பு நிலையங்கள் மற்றும் பயிர் சேமிப்பு களஞ்சியங்களையும் நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

## சுவீகரிக்க வேண்டாம்

எதிர்வரும் ஆறு மாதங்களுக்கு வாகனம் மற்றும் சொத்துக்களை சுவீகரிக்க வேண்டாமென வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு விசேட அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. அவசரமற்ற மற்றும் அத்தியாவசியமற்ற பொருள்களின் இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட நூற்றுக்கு நூறு கட்டாய வைப்பு நிதி எல்லை நேற்று (01) முதல் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நீக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியில் 5 பில்லியன் ரூபாய் கையிருப்பில் உள்ளது. 2021 ஆம் ஆண்டியில் இருவரையில் 5.6 மில்லியன் ரூபாய் மீளக் கையளிக்கப்பட்டுள்ளது.

2019 நிறைவில் இலங்கையில் 7.6 டொலர் மில்லியன் கையிருப்பில் மீதமிருந்தது. அதன்பின்னர் கடன் செலுத்துவதற்காக 6 மில்லியன் ரூபாய் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் தற்போதைய அந்நியச் செலாவணி இருப்பு 5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்படுவதாகவும் குறிப்பிட்ட ஆளுநர், 2021 ஆம் ஆண்டில் 5 சதவீத வளர்ச்சியையும், 2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 6.5 வளர்ச்சியையும் எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

தனிப்பட்ட அந்நியச் செலாவணி கணக்குகளில் எவ்விதமான மாற்றங்களும் மேற்கொள்ளப்படாது எனவும் ஆளுநர் தெரிவித்தார். வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு பணத்தை அனுப்பும் போது இயலுமானவரை உத்தியோகபூர்வமான வழிமுறைகளை பயன்படுத்துமாறு கோரிய ஆளுநர், வங்கிகளினூடாக பணத்தை நாட்டுக்கு அனுப்புவது சிறந்ததாகக் கூறினார் எதிர்காலத்தில் கடன் வழங்குவதற்கு முடியாத நிலைமையொன்று ஏற்படுமென சிலர் கருதுகின்றனர். எனினும், அவ்வாறு இல்லாது பொருளாதாரம் சீர்குலைந்துவிடாது நடவடிக்கைகளை எடுப்பதற்கான இயலுமை உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

## ஆராய்ந்து பார்க்கவும்

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்ட பின்னர், பொதுமக்கள் ஒன்றுகூடும் சந்தர்ப்பங்கள் ஏற்படும். அதனால், மீண்டும் கொவிட் தொற்றுப் பரவல் ஏற்படுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தாதிருக்க, சுகாதார வழிகாட்டுதல்கள் தொடர்பில் அவதானம் செலுத்துவது கட்டாயமென்று, சுகாதாரத் தரப்பு சுட்டிக்காட்டியது.

நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ தலைமையில் நேற்று (01) முற்பகல் இடம்பெற்ற கொவிட்-19 தொற்றொழிப்பு ஜனாதிபதி செயலணிக் கூட்டத்தின் போதே, இந்த விடயங்கள் வலியுறுத்தப்பட்டன.

வீடியோ தொழில்நுட்பத்தின் ஊடாக இடம்பெற்ற இந்தக் கூட்டத்தின் போது, அரச மற்று தனியார் துறையினரைப் பணிக்கு அழைப்பது மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகளின் போது பின்பற்றப்பட வேண்டிய சுகாதார வழிகாட்டுதல்களை, தற்போது வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபத்துக்கமைய பின்பற்ற வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது.

சுற்றுலா மற்றும் பொருளாதாரத் துறைகளின் மேம்பாட்டுக்காக முன்னெடுக்கப்பட வேண்டிய சுகாதார வழிகாட்டுதல்கள் தொடர்பிலும், இந்தக் கூட்டத்தின் போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

தொற்றுப் பரவல் நிலைமையைக் கட்டுப்படுத்தி வாழ்க்கை முறையைத் தொடர்வதற்காக, சுகாதாரத்துறை நிபுணர்களின் ஆலோசனைகளை ஊடகங்கள் வாயிலாகப் பொதுமக்களிடம் தொடர்ந்து கொண்டு செல்லவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

## இஸ்ரேல் யுவதியிடம்...

அந்த யுவதி, இராவணா எல்லை நீர்வீழ்ச்சியை பார்வையிட்டுக்கொண்டிருந்த போது தவறுதலாக கீழே விழுந்து காயமடைந்தார். அதன்பின்னர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சைப்பெறுகின்றார்.

## பெருந்தோட்டத் தொழில்...

நுவரெலியா-ரதெல்லையில் நேற்று (1) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே, மேற்படி சங்கத்தின் ஊடக பேச்சாளர் ரவீந்திர சேனரத்ன இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ தோட்ட முகாமையாளர்கள், உதவி முகாமையாளர்கள் உட்பட தோட்ட அதிகாரிகள் என்றால் யார், நாட்டின் பொருளாதாரத்துக்கு அவர்கள் எவ்வாறு பங்களிப்பு செய்கின்றனர் என்பது தொடர்பிலும், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாகவும் இதற்கு முன்னர் நாம் எடுத்துரைத்திருந்தோம். தோட்ட அதிகாரிகளை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கோரினோம்.

ஆனால், இவை தொடர்பில் பெருந்தோட்டத்துறை அமைச்சர் உரிய கவனம் செலுத்தவில்லை. தோட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை குறைவு என்ற போதிலும் அவர்களால் பொருளாதாரத்துக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்த முடியும். அப்படி இருந்தும் பணி புறக்கணிப்பு உள்ளிட்ட நடவடிக்கைகளில் நாம் ஈடுபடவில்லை. எனினும், இனியும் பொறுமைகாக்க முடியாது. நாளாந்தம் பிரச்சினைகள் அதிகரிக்கின்றன. எனவே, எமது பிரச்சினைகள் தொடர்பில் செவிசாய்த்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் பெருந்தோட்டத்துறையில் இருந்து தற்காலிகமாக விலகுவோம்.

உரப்பிரச்சினை உள்ளது. இதனால் தேயிலை உற்பத்தி 40 வீதத்தால் குறையும் அபாயம் உள்ளது. கிருமி நாசினிகள் இன்மையால் தேயிலை தோட்டங்களும் காடாகி வருகின்றன. இந்நிலையில் 1000 ரூபா சம்பளமும் வழங்க வேண்டும். உற்பத்தி குறையுமானால் பெருந்தோட்டத்துறையை எப்படி முன்னெடுப்பது?

இரசாயன உரமா, சேதன பசளையா என்பது பிரச்சினை அல்ல. தேயிலை ஆராய்ச்சி நிலையம் இருக்கின்றது. அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி எமக்கு அறிவியல் பூர்வமான முறைமையொன்றை வழங்க வேண்டும். தற்போதைய நிலைமை தொடர்ந்தால் தொழிலாளர்களுக்கு 3 நாட்களுக்கு மட்டுமே வேலை வழங்கக்கூடியதாக இருக்கும். தேயிலை தொழிலுடன் நேரடியாகவும், முறைமுகமாகவும் சுமார் 20 லட்சம் பேர் தொடர்புபட்டுள்ளனர். இதனால் அவர்கள் பாதிக்கப்படக்கூடும்.

ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தைக்கு நேரம் வழங்கப்பட வேண்டும். தோட்ட அதிகாரிகள்தான், தோட்ட தொழிலாளர்களுடன் நேரடியாக தொடர்பு பட்டுள்ளனர். தற்போது முரண்பாடுகள் அதிகரித்து வருகின்றன. தோட்ட அதிகாரிகள் தாக்கப்படும் மூன்றாவது சம்பவமும் பதிவாகியுள்ளது. எமது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு இல்லையேல் கடும் நடவடிக்கை யில் இறங்குவோம்." என்றார்.

## அரச சேவையை முன்னெடுக்க...

அவ்வாறு சேவைக்கு அழைக்கும் அதிகாரிகளைத் தவிர ஏனையவர்கள் வீடுகளிலிருந்து பணியாற்ற முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அரச சேவையாளர்களை பணிகளுக்கு அழைக்கும் போது, கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார் மற்றும் விசேட நோய்களுக்கு உள்ளாகியுள்ளவர்களை அழைக்காதிருக்க நடவடிக்கை எடுக்குமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அவ்வாறு அவர்களின் சேவை அவசியம் எனில், அத்தியாவசியமான நாள்களில் மாத்திரம் அவர்கள் அழைக்கப்பட வேண்டும்.

அதிகாரிகள் கடமைகளுக்கு சமூகமளித்தல் மற்றும் வெளியேறும் பதிவை மாத்திரம் பராமரித்தல் போதுமானது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேப்போல் தடுப்பூசி பெற்றுக்கொள்ளாத பணியாளர்கள் இருப்பார்களாயின், அவர்களுக்கு தடுப்பூசியைப் பெறுவதற்காக ஊக்குவிக்கப்பட வேண்டும் என்பதுடன், தடுப்பூசி செலுத்தப்பட்டிருப்பதற்கான அட்டையை கோரும் போது பணியாளர்கள் அதனை வழங்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கலந்துரையாடல், கூட்டங்கள், கருத்தரங்குகள் உள்ளிட்ட சகல விடயங்களிலும் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி முன்னெடுக்கப்பட வேண்டும்.

நிறுவனங்களின் சகல பொது இடங்கள் சாப்பாட்டு அறை, சிற்றுண்டிச்சாலை, கழிப்பறை உள்ளிட்ட இடங்கள் நாளொன்றுக்கு பல தடவைகள் தொற்றுநீக்கப்பட்டு, பராமரிக்கப்பட வேண்டும்.

சேவைகளைப் பெற்றுக்கொள்ள வரும் பொதுமக்களால் ஏற்படும் இட நெருக்கடியை முகாமைத்துவம் செய்யவும் சுகாதார முறைகள் பின்பற்றப்படுகின்றனவா என்பதை கண்காணிக்கவும் தகுந்த அதிகாரியொருவரிடம் பொறுப்புகள் பகிரப்பட வேண்டும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஸ்ரீ ஹர்ஷ வர்தன் ஷ்ரிங்லா...

இந்த விஜயம் நீண்டகால பலதரப்பட்ட உறவுகளை ஒருங்கிணைப்பதற்கும் இரு நாடுகளுக்கிடையிலான இருதரப்புக் கூட்டுறவுகளை மேம்படுத்துவதற்கும் பங்களிக்கும்.

வெளியுறவுச் செயலாளர் ஷ்ரிங்லாவின் இலங்கை வெளியுறவுச் செயலாளருடனான இருதரப்புக் கலந்துரையாடலுக்கும் மேலதிகமாக, ஜனாதிபதி, பிரதமர், நிதி அமைச்சர் மற்றும் வெளிநாட்டு அமைச்சர் ஆகியோரையும் சந்திக்கவுள்ளார்.

விஜயம் செய்யவுள்ள இந்திய வெளியுறவுச் செயலாளர் இலங்கையில் தங்கியிருக்கும் போது கண்டி, திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணத்திற்கு விஜயங்களை மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தியாவின் வெளியுறவுச் செயலாளராகப் பதவியேற்றதன் பின்னர், அவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் முதலாவது சந்தர்பபம் இதுவாகும்.

## கௌதாரிமுனையில் 100 ஏக்கர் வயல்...

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவரின் இணைப்பாளர் வை.தவநாதன் தலைமையில், பூநகரி பிரதேச செயலாளர் கிருஷ்ணேந்திரன், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பூநகரி பிரதேச அமைப்பாளர் இராசலிங்கம், கௌதாரிமுனை கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் பகீரதன், பிரதேச செயலக காணி உத்தியோகத்தர்கள், கிராமசேவையாளர் இணைந்து சீட்டிழுப்பு முறையில் சுமார் 100 ஏக்கர் காணியை பயனாளிகளுக்கு பகிர்ந்தளித்தனர்.

கௌதாரிமுனை பிரதேசத்திற்கு அமைசசர் டக்ளஸ் தேவானந்தா அண்மையில் சென்றிருந்தபோது அந்தப் பகுதியிலுள்ள வயல் காணிகளை தமக்கு பெற்றுத்தருமாறு பிரதேச பொதுமக்கள் விடுத்த வேண்டுகோளுக்கமைய இதற்கான ஏற்பாடுகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டிருந்தார்.

அதற்கமைய, பூநகரி பிரதேச செயலாளர் கிருஷ்ணேந்திரன், காணி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராமசேவையாளர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் பயனாளிகள் தெரிவை மேற்கொண்டு, காணிகளைப் பகிர்ந்தளிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார்.

குறித்த காணிகளை நெற்செய்கைக்கு ஏற்ற வகையில் தயார்ப்படுத்தும் வகையில், 2.7 மில்லியன் ரூபா செலவில் காணியை உழுது பண்படுத்தி, வரம்பு கட்டும் பணிகளை கிளிநொச்சி-முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள ஆணையாளர் தேவரதன் மேற்கொண்டிருந்தார்.

இந்நிலையில், தலா ஒரு ஏக்கர் வீதம் 100 பயனாளர்களுக்கு சீட்டிழுப்பின் மூலம் காணிகள் அடையாளப்படுத்திக் கொடுக்கப்பட்டது. இந்த நிகழ்வு நடைபெற்றவேளை சிறிதளவு மழை வீழ்ச்சியும் காணப்பட்டதால், உடனடியாகவே விதைப்பில் ஈடுபட்டு காலபோகச் செய்கையில் ஈடுபடுவதற்கான இயற்கையின் வாழ்த்தும் தமக்குக் கிடைக்கப்பெற்றிருப்பதாக முதல் தடவையாக இந்தக் காணிகளில் நெற்செய்கையில் ஈடுபடவுள்ள கௌதாரிமுனை மக்கள் மகிழ்ச்சி வெளியிட்டனர்

## மட்டக்குளி இராணுவ...

தொட்டலங்க, எல்ல விளையாட்டு கழக தலைவராக செயற்பட்ட அகில சம்பத் ரத்னசிறி எனப்படும் 3 பிள்ளைகளின் தந்தையான 36 வயதான ஒருவரை கொலை செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளால் தொடர்ந்த வழக்கு விசாரணை இன்று இடம்பெற்ற போதே விளக்கமறியல் உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களில் ஒரு பெண்ணை தவிர்ந்த ஏனைய அனைவரும் புலனாய்வு பிரிவை சேர்ந்த அதிகாரிகளாக செயற்படுபவர்கள் என்பதால், சிறைச்சாலையில் அவர்களுக்கு விசேட பாதுகாப்பை வழங்குமாறு உத்தரவிடுமாறு கோரி, பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் மன்றில் இ கோரிக்கை விடுத்தனர்.

சந்தேகநபர்கள், புலனாய்வு பிரிவின் செயற்பாடுகள் தொடர்பில் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை எனவும் மாறாக நன்றாக திட்டமிட்டு, பொதுமகனொருவரை கொலை செய்த சம்பவம் தொடர்பில் ஆஜர்ப்படுத்த ப்பட்டுள்ளதால், வரப்பிரசாதங்களை வழங்குமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிடுவதற்கு தம்மால் முடியா தென மேலதிக நீதவான் இதன்போது சுட்டிக்காட்டியிருந்தார்.

## “அடித்து கொன்று....

மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் வீ.தியாகேஸ்வரன் முன்னிலையில் நேற்று (01) வெள்ளிக்கிழமை எடுக்கப்பட்டு எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதவான் உத்தரவிட்டார்.

இந்த வழக்கு விசாரணைக்காக படுகொலை செய்யப்பட்ட மகாலிங்கம் பாலசுந்தரத்தின் தந்தையான வேலுப்போடி மகாலிங்கம், தாயாரான மா.. சின்னப்பிள்ளை நீதிமன்றத்தில் ஆஜரான பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தனர்.

ஒவ்வொரு வழக்கு விசாரணையின் போது மட்டக்களப்பு பொலிஸார் பாக்கமாட்டினம் இதனை சிஐடி யிடம் கொடுக்குமாறு நீதவான் தெரிவிக்கின்றார். ஆனால், அதற்கு பொலிஸார் ஒரு பதிலும் கொடுக்கின்றார்கள் இல்லை. இந்த ஒட்டோ காரன்தான் எனது பிள்ளையை கொலைக்கு கொடுத்தவன். அவனுக்கு எல்லாம் தெரியும்; அவனை பிடிக்கவேண்டும்.

எனது மகன் படுகொலை செய்யப்பட்டு இன்று 100 நாட்கள் கடந்துள்ளதாகவும் 8 ஆவது தடவையாக வழக்கு தவணை போகின்றது. பொலிஸார் ஒன்றும் தெரிவிக்கவில்லை. எறாவூர் பொலிசார் தலைமையில் விசாரணை இடம்பெறுகின்றது .

அவர்கள் பணக்கார், அரசியல்வாதி. நாங்கள் ஏழைகள் என்பதால் எதுவும் நடக்கவில்லை. இந்த கொடுமையைக் கேட்க ஆளில்லையா. எனது மகனின் படுகொலைக்கு நீதிவேண்டும் என படுகொலை செய்யப்பட்வரின் தாயாரான மகாலிங்கம் சின்னப்பிள்ளை கண்ணீர்மல்க தெரிவித்தார்.

இதேவேளை கடந்த ஜூன் மாதம் 21ஆம் திகதி இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரனின் மெய்பாதுகாவர் பொதுமகன் மீது, துப்பாக்கி சூடு நடத்தியதில் 34 வயதுடைய மகாலிங்கம் பாலசுந்தரம் என்பவர் உயிரிழந்தார். அதனையடுத்து அவரது மெய்பாதுகாவலர் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பூஜித், ஹேமசிறியிடம் குற்றப்பத்திரிகை கையளிப்பு

மேற்படி வழக்கு, கொழும்பு மேல் நீதிமன்றத்தில், மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று (01) அழைக்கப்பட்டது. இதன்போது, அவ்விருவரும் நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர். அவர்களிடம் போது குற்றப்பத்திரிக்கைகள் கையளிக்கப்பட்டுள்ளன.

மனுதாரர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப் பீரிஸ், ஒவ்வொருவருக்கும் எதிராக 864 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்றார்.

எவ்வாறாயினும், குறித்த குற்றச்சாட்டுகளில் திருத்தம் செய்யப்பட்டு குற்றம் சாட்டப்பட்ட ஒவ்வொருவருக்கும் எதிராக 855 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர், முறைப்பாட்டின் சாட்சியாளர்களாக 1,215 நபர்கள் பெயரிடப்பட்டுள்ளனர் என்றார்.

> **குறித்த குற்றச்சாட்டுகளில் திருத்தம் செய்யப்பட்டு, குற்றம் சாட்டப்பட்ட ஒவ்வொருவருக்கும் எதிராக 855 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர், முறைப்பாட்டின் சாட்சியாளர்களாக 1,215 நபர்கள் பெயரிடப்பட்டுள்ளனர்**

திருத்தங்கள் தொடர்பில் சட்டமா அதிபரினால் எழுத்துப்பூர்வமாக பிரதம நீதியரசருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், குற்றப்பத்திரிகையில் திருத்தம் செய்து தொடர பிரதம நீதியரசர் ஒப்புதல் அளித்ததாகவும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 22 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

## இராணுவத்திடம் கையளித்த...

நட்டஈடும் வேண்டாம் மரணச்சா ன்றிதழும் வேண்டாம், எமது குழுந்தை களுக்கு உயிர்வாழும் உரிமை இல்லையா?, எங்கள் குழந்தைகள் எமக்கு வேண்டும், பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கு போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளைத் தாங்கியவாறும், கோசங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பா ட்டத்தை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்புக்கு பயணித்த பஸ் சிக்கியது

நேற்று (01) அதிகாலை மடக்கிப் பிடிக்கப்பட்டது.

மாகாணங்களுக்கு இடையில் போக்குவரத்து தடைச் செய்யப்பட்டுள்ள நிலையில், அந்தப் பஸ், பயணிகளை ஏற்றிக்கொண்டு பயணித்துள்ளது.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டாலும் சில வழிகாட்டல்கள் இன்னும் கடைப்பிடிக்கப்படுகின்றன. அதில், மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக்கு தடைச் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுப்பிரமணியன் சுவாமி கொழும்பு வருகிறார்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பின் பேரிலேயே அவர், கொழும்புக்கு வருகைதரவுள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர். நவராத்திரி விழாவில் பிரதமர் மஹிந்தவுடன் இணைந்து பங்கேற்கவுள்ளார் என அறியமுடிகின்றது.

இந்நிலையில், இலங்கை படையின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பங்கேற்கும் நிகழ்வில் கலந்துகொண்டு, தேசிய பாதுகாப்பு தொடர்பில் உரையாற்றவுள்ளார் என அறியமுடிகின்றது.





# ‘சாவுக்கொரு சாட்டு வேணும்’

வட்டுக்கோட்டை தெற்கில், முதலி கோவிலடிக்குப் பக்கத்தில், அரசடி கிராமத்தில், ஞாயிற்றுக்கிழமை (19.09.2021) இடம்பெற்ற வன்முறையில் பாதிக்கப்பட்ட மக்களை, விதை குழும செயற்பாட்டாளர்கள், நேரில் சந்தித்து உரையாடிய விடயங்களின் தொகுப்பு இது:

யாரை யார்க் காப்பாற்றுவது என்று திணறி வாழ்ந்து கொண்டிருகிறார்கள். இரவில் ஏதாவது நடந்தாலும் என்று, உறவினர்கள் சேர்ந்து தங்குகிறார்கள். கொடூரமான சாதிவெறித் தாக்குதல், எமது சமூகத்தின் மனச்சாட்சியை உலுக்கவில்லை. ‘சாதி’ வெறித் தாக்குதலை, ‘குடி’ வெறித் தாக்குதலாகப் பெரும்பாலான ஊடகங்கள் சுருக்கி இருக்கின்றன.

பொதுச் சமூகத்தின் கவனத்தை, சாதிய ஒடுக்குமுறைகள் தொடர்பான பிரச்சினைகளை நோக்கித் திருப்புவதில், அரசியற் தரப்பினருக்கும் பெரும்பாலான ஊடகங்களுக்கும் அக்கறை இருப்பதில்லை. சமூக நீதியின் மேலும் மக்களின் சுயமரியாதை மீதும் அக்கறையுள்ள ஒவ்வொருவரும், அரசடி மக்களின் துயரையும் அன்றாடம் அவர்கள் எதிர்கொள்ளும் அச்சத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

இந்தத் தாக்குதலில் ஈடுபட்டவர்களுக்குச் சட்ட ரீதியான தண்டனையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்கள் இழந்த சொத்துக்களுக்கான இழப்பீடும் வழங்கப்பட வேண்டும் என்பதற்காக சமூகநீதியின் பால் அக்கறைகொண்டவர்கள் அனைவரும் உணர்வுத் தோழமையுடன் ஒன்றிணைந்து குரலெழுப்ப வேண்டும்.

நாம் கண்ணை மூடிக் கொண்டு இங்கு சாதியில்லை சாதியில்லை என்று சொல்லிக்கொண்டிருப்பதால் சாதி ஒருபோதும் ஒழிந்துவிடாது. சாதி ஒழிப்பென்பதே சமூக விடுதலைக்கும் சமத்துவத்திற்கும் சுயமரியாதைக்கும் முதற்படி. சமத்துவமும் சுயமரியாதையும் நிறைந்ததோர் சமூகம் என்பதே சமூகநீதி. அதற்கான போராட்டமே சமூக விடுதலைக்கான செயற்பாடு. இவற்றை உணர்ந்து சமூகத்தில் நிலவும் ஒடுக்குமுறைகளை அவற்றின் வேர்களில் இருந்து நுட்பமாக அறிவதே அரசியல் மயப்படுதலின் முதற்படி. நமது சமூகத்திலிருந்து சாதி ஒழிக்கப்பட வேண்டும். சமூக நீதி வென்றெடுக்கப்பட வேண்டும்.

வெட்டப்பட்ட கையும் விரல்களும், மஞ்சள் நிற துணியில் ஏணைக்குள் கிடக்குமாறு அசைய இன்பநாதன் பேசிக்கொண்டிருந்தார். “பிள்ளையளை வேலைக்கு விட்டிட்டு உயிரைக்கையில பிடிச்சுக்கொண்டு இருக்க வேண்டிக்கிடக்கு. சும்மா வாற பெடியளை மறிச்சு, காடுகளுக்கை கூட்டிக்கொண்டுபோய் வச்சு அடிப்பாங்கள். பந்தடிக்கப்போற, பட்டம் விடப்போன பெடியள் எண்டு எல்லாரையும் மறிச்சு சாதியைச் சொல்லி அடிக்கிறாங்கள். அவங்கள் வெளிநாட்டுக்காசு; வேலைக்கு போகத் தேவையில்லை. குடிச்சிட்டு என்னவும் செய்யலாம். நாங்கள் ஒவ்வொரு நாளும் வேலைக்குப் போகோனும். எங்களாலை சண்டை பிடிச்சுக்கொண்டே இருக்கேலாது.

“இஞ்சை எங்களுக்கு மட்டுமில்லை, செம்பாட்டன் தோட்டமெண்டால், மூளாயெண்டால், தொல்புரமெண்டால், சுழிபுரம் எண்டால் எல்லா இடமும் அப்பிடித்தான்; தொடந்து இது நடந்துகொண்டிருக்கு. உந்த வேலித் தகரத்தப் பாருங்கோ. அந்தப்பக்கம் வேளாமாக்களின்ர வேலி; இது எங்கடை வேலி. வெறியிலை அடிக்கிறவன் அந்தப்பக்கம் இருக்கிறதையுமெல்லோ சேர்த்து அடிச்சுப் பிரிச்சிருப்பான். அவங்கட ஆக்களின்ர தகரத்திலை ஒரு காயமிருக்கோ?

“வேலைக்குபோய் பின்னேரம் ஆத்துப்பறந்து, செத்துப்பிழைச்சுத்தானுங்கோ வேலையாலை வாறது. அப்ப மறிச்சு அடிப்பாங்கள்; நொட்டைக் காரணங்கள் சொல்லுவாங்கள். ஏன் அடிச்சனி எண்டு போய்க் கேட்டால், பெட்டையளுக்கு விசில் அடிச்சவங்கள் எண்டு சொல்லுவாங்கள். வேலிக்குள்ளால எட்டிப் பார்த்தவங்கள்; குளை முறிச்சவங்கள் எண்டுவாங்கள். அவங்களுக்கு எங்கடை ’சாவுக்குச்சாட்டு வேணும்’ அவ்வளவுதான்.

“கோயில், குளம், திருவிழாக்கள் எண்டால் நல்லா நடக்கும். அங்கையும் எங்கடை பெடியளுக்குத்தான் அடிப்பாங்கள்; குடிச்சிட்டு மட்டும் அடிபடுறவங்கள் தங்கடை பெடியளுக்கும் சேர்த்துத்தானே அடிப்பாங்கள். தேடிவந்து சாதியைச் சொல்லி அடிக்கிறாங்கள் எண்டால், உது என்ன?







“தங்கடை வெறிக்கு, ‘டேஸ்ட்’ நாங்கள்தான்; ஒரு சவாரிக்குப் போனால் சண்டை, திருவிழாக்குப் போனால் சண்டை. 50 வயசு எனக்கு; கோட்சும் தெரியா, பொலிசும் தெரியாது. ஆனால், உவங்களுக்கு நூறு கேஸ் கிடக்கு பொலிசிலை; உவங்கள் கொல்லுவாங்கள், எல்லாத்தையும் காசாலை உச்சிப்போடலாம் எண்டு.”

இளைஞர் ஒருவர் அன்றைய சம்பவத்தை விளக்கினார். “அண்டைக்கு வேலைக்குப் போய்ட்டு சைக்கிள்ளை வந்து கொண்டிருந்தனாங்கள். ‘பேபிகடை’ முடக்கிலை திரும்பும்போது, அவங்கள் நிண்டு பாத்தவங்கள்; நாங்கள் போக மோட்டபைக்கில பின்னாலை வந்து தள்ளிவிட்டாங்கள். நாங்கள் தடுமாறி கிழுவம் வேலிக்கும் போஸ்ட்டுக்கும் நடுவில போய் விழுந்திட்டம். எழும்பி ஏன் அண்ணை தள்ளின்னீங்கள் எண்டு கேட்டம். அதுக்கு ‘எங்கையடா பம்மிப்பம்மிப் போறீங்கள், நீங்களோ வேலிலை கள்ளக் குளை முறிச்ச’ எண்டு கேட்டாங்கள். நாங்களேன் குளை முறிக்கிறம்? எங்களுக்கு என்ன விசரோ எண்டு கேட்டம். சரி விடுங்கோ நாங்கள் போறம் எண்டு வெளிக்கிட, சைக்கிளை மறிச்சு முன் சில்லைத் தூக்கித் தூக்கிக் குத்திக்கொண்டு நிக்கிறார். ஆளுக்கு வெறி. நிக்கேலாத வெறி; நான் அப்பாட்டை அடிச்சுச் சொன்னன் இப்பிடி மறிக்கிறாங்கள் எண்டு”.

மகன்கள் இக்கட்டான சூழ்நிலையில் சிக்கி இருப்பதைத் தெரிந்துகொண்டு இன்பநாதன் விரைந்து போயிருக்கிறார்; நடந்ததை அவரே விவரிக்கிறார். ‘’ ஒருமாதிரிப் பிள்ளையளைக் கொண்டு வாறதுக்குள்ள அவங்கடை ஆக்கள் நிறையப் பேர் வந்திட்டாங்கள். நான் கெஞ்சிக் கூத்தாடிச் சமாளிச்சுக் கொண்டிருக்க, ரெண்டு பேர் ஓட்டோவிலை வந்து, பெரிய கல்லாலை எறிய வெளிக்கிட நாங்கள் ஓடி வந்திட்டம். அவங்கள் ரோட்டிலை லைட்ட நிப்பாட்டிட்டு எங்கட பக்கம் வாறாங்கள்.

“எனக்கு விளங்கீட்டு, இவங்கள் வாளோடதான் வாறாங்கள் எண்டு; நான் வாளைக் கண்டிட்டன். அவன் வாளைத் தூக்கிக் காட்டுறான். ‘டேய், இந்தா பத்துத்தலை உறுளுமடா எண்டுகொண்டு வாறான். வாள் பளிச் பளிச்செண்டு மின்னுது. கதைச்சு சமாளிக்கத்தானே வேணும் எண்டு, முன்னாலை போனன். வெட்டி ப்போட்டான் கையுக்கு; விரலும் பறந்து இந்த வெட்டும் விழுந்திட்டு. நான் பைப்ப எடுத்து விசுக்காட்டி அண்டைக்கு என்ர தலை போயிருக்கும். பெடியனுக்கு வெட்ட ஓங்கப் பெடியன் தகரத்தாலை விழுந்து அங்காலை ஓடிட்டான். அதுக்குப் சும்மா சறாம் புறாமெண்டு தகரங்களை,உந்த நீட்டுக்கு வேலியளை வெட்டி விழுத்திக்கொண்டு போறாங்கள். வேலியைக் கொழுத்தடா, வீட்டை கொழுத்தடா எண்டு கத்துறாங்கள்.

“அவங்களுக்கு சண்டை செய்து பழக்கம் தானே, அவங்களிட்ட வாள் இருக்கு எங்களிட்டப் பாளைக்கத்தி கிடக்கு, அது எங்கடை தொழில் செய்யிற ஆயுதம், அதுக்கு உவங்கள் பயம், ஆனால் நாங்கள் தொழிற்செய்யிற ஆய்தத்தால குத்துவெட்டுக்குப் போமாட்டம். அதோட எங்கள் எல்லாரிட்டையும் ஆயுதம் இல்லை. ஒவ்வொருத்தர் ஒவ்வொரு தொழிற் செய்யிறம்தானே.

“அவங்களுக்கு நாங்கள் அடங்கி இருக்கோணும் எண்டு நினைக்கிறாங்கள். ஆனா எங்களுக்குச் சண்டைக்கு விருப்பமில்லை. எங்களை எல்லாருக்கும் நல்லாவே தெரியும். பழக்கமான முகங்கள்தான். அடிக்கிறவங்கள்தான். ஆனால் இப்பிடி வெட்டிற அளவுக்கு போவாங்கள் எண்டு நாங்கள் நினைக்கேல்லை. பிள்ளைத்தாச்சி பிள்ளையள் ஒருபக்கம், குழந்தைப் பிள்ளையள் ஒருபக்கம், குமர் பிள்ளையள் ஒருபக்கம் ஓடிப் பதுங்குதுகள், கத்துதுகள், பிள்ளைத் தாச்சிப் பிள்ளைய வேலிக்காலை தள்ளி ஓட விட்டம்.

அப்பிடியே ஒரு பத்து நிமிசம் கடகத்துக்க கல்லுக் கொண்டு வந்து எறிஞ்சாங்கள். மழை மாதிரி கல்லு வருது. இந்தக் கொட்டிலெல்லாம் சரி. எல்லாரும் வீட்டுக்குள்ள ஓடிட்டம். எங்களுக்குச் சண்டேலை விருப்பமில்லை. அவங்களுக்கு அதுதான் வேணும்” என்றார்.

இரண்டு தாய்மார்கள் அன்றைய சம்பவத்தை விவரிக்கும்போது, “இதேமாரி எங்கடையாக்கள் அங்க போய் செய்திருந்தால், இண்டைக்கு பொலிஸ் வந்து எங்கடை வீட்டை நிண்டு எங்களைப் பிடிச்சு உலுப்பி இருக்கும். எங்க புரிசனக் கொண்டா, பிள்ளையைக் கொண்டா எண்டு.

“நீதி நியாயத்துக்கு இந்த நாட்டிலை இடமே இல்லை. இப்ப லொக்டவுன் எடுக்க பள்ளிகூடம் தொடங்கப் போகுது, பிள்ளையளை எப்பிடித் தனிய விடுறது. வேலையள் தொடங்கப்போகுது, ஆனால் எங்கட பிள்ளையளுக்கு ஆர் உத்தரவாதம், இது இதோட முடிஞ்சிடும் எண்டு விட்டிட்டு இருக்கேலுமோ? பாதுகாப்பிருக்குமோ? இதுகென்ன முடிவு? ஆரிட்டக் கேக்கிறது?

எனக்கு நல்லாத் தெரியும் அவங்கள் எங்கடை பொம்பிளையளை மதிக்கிறேல்ல, எங்கடையாக்கள் எண்டாலே அவைக்கு இழக்காரம். என்ர வீட்டு மனிசனும் என்னை எடி எண்டு கதைக்கிறேல்ல; ஆனால் அவை எங்கள கேவலமா வாங்கடி போங்கடி எண்டு கதைக்கிறாங்கள்.இன்னும்என்னென்னவோ சொல்லக் கூடாததெல்லாம் சொன்னாங்கள்.

நீங்கள் ஆர், தமிழர் தானே. நீங்களே இப்பிடிக்கேட்டால், அடுத்தவன் நாளைக்கு வந்து எங்களை என்ன செய்திட்டு போவான். நீங்கள் இப்பிடிச் செய்தால். சிங்களவன் செய்வான். அவன் அந்நியன். ஆனா இவங்கள் நிக்கிறாங்கள் பத்து கழுத்த விழுத்துவம், வீடெல்லாம் கொழுத்துவம் எண்டு. அப்ப நாங்கள் எல்லாம் ஆர்?

“கேற்றை உடைக்கிறாங்கள்; வெளியிலை கத்துறாங்கள்; நாங்கள் பொம்பிள்ளைப் பிள்ளையள், குழந்தையள வச்சுக்கொண்டு இருக்கிறம். லைட்ட அணைச்சுப்போட்டு அறைக்க வச்சுப்பூட்டிக் கொண்டு கிடக்கிறம். நான் ஆண்டவரைத்தான் மண்டாடின்னான். ஐய்யோ உள்ளுக்க வந்திடக்கூடாதெண்டு. எங்கடை கதவென்ன இரும்போ ஐயா, இதைக் கொத்திட்டுவரக் கனநேரமோ எடுக்கும்?

நான் பின்வேலியைக் காலாலை உதஞ்சு, விழுத்தி என்ர பிள்ளையளைக் காப்பாற்றின்னான். குமர்ப் பிள்ளையள் என்ர பிள்ளையள்; அண்டைக்கு என்ன பாடுபட்டிருக்கிங்கள் சொல்லுங்கோ? என்ர மனிசன் ஒரு சோலிக்கும் போமாட்டுது. ஏன் சும்மா பிரச்சினையெண்டு, இரவிலை கூட்டம் கூட்டமாத் தான் எல்லாரும் படுக்கிறது” என்றார்.

இரண்டு இளைஞர்கள் சம்பவம் குறித்துத் தெரிவிக்கும்போது கூறியதாவது; “பொலிஸ், கோட் கேஸ் ஒண்டும் நிக்காது. சடஞ்சு போடுவாங்கள் எண்டுதான் பயமாக் கிடக்கு. எங்கடை பெடியள் அடிச்சா திருப்பி அடிக்கோணும் தடுக்கோணும் எண்டுதான் நினைக்கிறாங்களே தவிர, உண்மையா சண்டைக்கு போற மனநிலையிலை ஒருத்தரும் இல்லை. நிறையப்பேருக்கு அடிச்சிருக்கிறாங்கள். ஆனால் நாங்கள் சமாளிச்சுத்தான் போக வேணும். இல்லாட்டி நாங்கள் நாளைக்கு வேலைக்குப் போகேலாது.

“அந்தக் காலத்திலை இருந்து அவங்களுக்கு நாங்கள்தான் வேலைக்குப் போறனாங்கள். நாங்கள் குடும்பத்தைப் பாக்க உழைக்கோணும். எங்கடையாக்கள் கொஞ்சம் படிச்சு உத்தியோகம் அது இது எண்டு போனால் இழக்காரம், எரிச்சல் ‘கொம்மா எங்கட வீட்டிலைதான் வேலை செஞ்சவா’ எண்டு நக்கல். இஞ்ச மட்டுமில்லை சுத்தி இருக்கிற துணைவி, மூளாய், செம்பரட்டை, பொன்னாலை எல்லா இடத்திலையும் இதே கோலம் தான். கம்பசுக்கு போய், அரசாங்க வேலையள் கிடைக்கிற பெடியள், பிள்ளையள் கொஞ்ச நாளிலையே இஞ்சாலை இருக்கேலா எண்டு ஊரை விட்டு போயிடுவினம். அதனால ஊர் அப்பிடியேதான் கிடக்கு” என்றார்.

செயலாளர், விதை குழுமம்

## சட்டவிரோத செயற்பாடுகளின் மையம் ஆறுகள், குளங்கள்:

# கசக்கும் கசிப்பு

வ. தீவாகரன்





உலகத்தை கொவிட்- 19 பெருந்தொற்றின் மூலமாக, இயற்கை அடக்கி வைத்திருந்தாலும், பல்வேறான குற்றச்செயல்களும் சட்டவிரோத செயற்பாடுகளும் நடந்தேறிய வண்ணமே உள்ளன.

நாட்டை நிர்வகிக்கும் அரசாங்கம் சட்டவிரோத செயல்களைக் கட்டுப்படுத்த பல்வேறு சட்டங்களை நிறைவேற்றினாலும் இன்னமும் குற்றச்செயல்களும் சட்டவிரோத செயற்பாடுகளும் முடிந்தபாடில்லை. ஆரோக்கியமானதும், நல்லொழுக்கம் கொண்டதுமான சமூகத்தினை கட்டியெழுப்ப வேண்டுமென கோசங்கள் இட்டாலும், கிராமங்களில் இடம்பெறுகின்ற அசம்பாவிதங்களை முறியடிக்க அல்லது முற்றுப்புள்ளி வைக்க முடியாமல் இருப்பதும் கவலையானதொன்றே.

நாட்டில் சட்டபூர்வமான முறையில் மதுபானசாலைகள் இயங்கிக் கொண்டிருக்கையில், அவற்றிற்கும் மேலாக கசிப்பு உற்பத்திகள் இடம்பெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. சட்டவிரோத செயல்களுக்கு எதிரான சட்டங்கள், சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக பொலிஸார் உள்ளிட்ட அரச ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருந்தாலும், அவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகள் இன்னமும் முடிவுறுத்தப்படவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் கசிப்பு உற்பத்திகள் இடம்பெறுவதை அறிகின்றோம். அதிலும் மட்டக்களப்பின் படுவான்கரைப் பகுதியில், ஆறுகள், குளங்களை அண்டிய பகுதிகளில் இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகள் நடைபெறுகின்றன.

அண்மையில், கண்டியநாறு, அடைச்சல் போன்ற குளங்களில் கசிப்பு உற்பத்தி நடைபெறுவதாகவும், அதனால் அக்குளங்களில் உள்ள மீனினங்கள் இறப்பதாகவும் செய்திகள் வெளியாகிருந்தன. அப்பகுதியில் இருந்து பெருமளவிலான கசிப்புகளும் கைப்பற்றப்பட்டு இருந்தன.

அதேபோன்று சாமந்தியாறு, புளுகுணாவை குளம், விளிம்பாகுளம், சிறையாத்தீவு போன்ற பகுதிகளிலும் கசிப்பு உற்பத்தி நிலையங்கள் முற்றுகை இடப்பட்டிருந்தன. இவ்வாறு அமையும் ச கசிப்பு உற்பத்தி நிலையங்களின் உற்பத்திகளை, அதிகளவில் சாதாரண மக்களே அருந்துகின்றனர்.

மதுபானங்களை விடக் குறைந்த விலையில் குறித்த கசிப்பு விற்பனை செய்யப்படுவதால் இதற்கு சாதாரண மக்கள் அடிமையாகிருன்றனர். அதேவேளை எந்நாளும், தாம் வசிக்கின்ற இடங்களுக்கு அருகிலேயே கசிப்பு கிடைப்பதினாலும் இதனை அடிக்கடி அருந்துவதற்கும் வாய்ப்பாகி உள்ளது. எவ்விதமான உத்தியோகபூர்வ மதுசாரப் பெறுமானங்களும் இன்றி, தமக்கு விரும்பிய அளவுகளில் இவ்வாறான உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனால், இவ்வுற்பத்தி எவ்விதமான பக்கவிளைவுகளை மக்களுக்கு ஏற்படுத்தும் என்பதும் தெரியாமல் உள்ளது. எதையாவது அருந்தினால் போதும் என நினைக்கின்ற சாதாரண மக்களிடத்தில் பாரிய தாக்கத்தினை உண்டுபண்ணுகின்றது. குடும்பச் சண்டைகளும் வீட்டில் இருக்கின்ற பொருட்களை விற்றுகூட இதனை அருந்துகின்ற துர்ப்பாக்கியமும் கிராமப்புறங்களிலே இடம்பெறுகின்றன.

வீடுகளிலும் சிறுசிறு அளவில் இவ்வாறான உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தமையையும் அறியமுடிகின்றது. இவ்வாறான உற்பத்தி நிலையங்கள் முற்றுகையிடப்படுகின்ற போது, கசிப்பும், அதற்கு பயன்படுத்துகின்ற பொருட்களுமே மீட்கப்படுகின்றன.

ஒருசில இடங்களில் மாத்திரமே உற்பத்தி மேற்கொண்டனர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்படுகின்றனர். சில இடங்களில் 20க்கு மேற்பட்ட பெரல்களில் இருந்து கசிப்பு கைப்பற்றப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. அவ்வாறானெனின் இது சிறிய அளவிலான உற்பத்தி நிலையமாக பார்க்க முடியாது. பெரிய அளவிலான தொழிற்சாலையாகவே பார்க்கத்தோன்றுகின்றது.

அவ்வாறு பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டு, அவை விற்பனை செய்யப்படுகின்றதென்றால் இவற்றில் ஓரிருவர் மாத்திரம் சம்மந்தம் உடையவர்களாக இருக்க முடியாது. கூட்டாக இயங்கி, திட்டமிட்டு செயற்படுத்தப்படுகின்றது என்பதனை இதன் மூலம் ஊகித்துக்கொள்ள முடிகின்றது.

இவ்வாறான சட்டவிரோத உற்பத்தி நிலையங்களை நடத்துபவர்களாக, இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ளுபவர்களாக அதிகளவில் இளம் சமூகத்தினர் உள்ளமை மிகக்கவலையானதே. அதேவேளை, இளம்சமூகத்தினறே அதற்கு அடிமையாகின்றமையினையும் அவதானிக்க முடிகின்றது.

எனவே, மாவட்டத்தில் இருக்கின்ற ஒட்டுமொத்த பொறுப்புவாய்ந்த அதிகாரிகளும் இச்சட்டவிரோத செயற்பாடுகளை இல்லாமல் ஆக்குவதற்கு ஒன்றாக இணைய வேண்டும். சமூக நலனில் அதீத அக்கறை கொண்டு, ஆரோக்கியமானதும் ஒழுக்கமானதுமான சமூகத்தினை கட்டியெழுப்புவதற்கு முயற்சிக்க வேண்டும்.

இதற்கான பூரண ஒத்துழைப்பினையும், தடைகளையும் நீக்குவதற்கு மக்கள் பிரதிநிதிகளும் முன்வர வேண்டும். இவற்றிற்கு ஆதரவாக, துணையாக செயற்படுபவர்களையும் சமூகத்திற்கு தெரியப்படுத்தி அவ்வாறானவர்களையும் சட்டத்தின்முன் நிறுத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டம் கசிப்பு உற்பத்தி அற்ற மாவட்டம் என்ற நற்பெயரினைப் பெற வேண்டும். வீதி, வீடு, பாலம், கட்டடம் இவைகள் மட்டும் அபிவிருத்திகள் அல்ல. மக்களிடத்திலும் அபிவிருத்தி இடம்பெற வேண்டும். குறிப்பாக இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகள் நீங்கிய அபிவிருத்தி இடம்பெற வேண்டும். இவ் அபிவிருத்தியை அனைவரும் இணைந்தால் இலகுவாக மேற்கொள்ள முடியும். இல்லையாயின் இருண்ட உலகிற்கு மக்கள் செல்வதை தடுக்கமுடியாமல் போய்விடும்.







# மதிப்பெண்களை நோக்கி ஓடும் தேர்வு முறைகள்

**பிரியா இராமநாதன்**




இன்றுவரை நம்முடன் தொடர்வது வெறும் ஏட்டுக்கல்வி முறமைதானா? ஏனெனில், நமது தேசிய வருமானம், நம்முடைய கல்வி முறைக்கு வெளியில் இருந்துதானே கிடைக்கிறது? மக்களில் உழைப்பு, வாழ்வு என அனைத்தும் இக்கல்வி முறைக்கு வெளியில்தானே இன்னுமே நீடிக்கிறது? கையெழுத்திடவும் வாசிக்கவும் எழுதவும் என சில அடிப்படையான பொதுவான விடயங்களை பெற்றுக்கொடுப்பதுடன், அனுபவவாத அறிவை சற்று ஒழுங்குபடுத்திய வடிவில் கிடைக்குமாறு செய்வதுமட்டும்தான் இன்றைய கல்வியின் பயனா? பாடசாலையில் ஓராண்டு முழுவதும் கற்ற அறிவினை மூன்று மணி நேரத்தில் மதிப்பிடும் இந்தப் பொதுத் தேர்வு முறையானது, முழுமையான ஒரு மதிப்பீடாக இருக்க இயலுமா? சிந்தித்துப்பார்த்தால் இல்லை என்றே தோன்றுகிறது. ஏனெனில் தேர்வும் அதன் முடிவுகளும் ஒரு மாணவனின் திறமைக்கு கிடைக்கும் மதிப்பீடு. ஆனால்,

இன்றைய நிலையில் பந்தயக் குதிரைகளைத் தயார்செய்வதுபோல், மதிப்பெண்களைப்பெற மாணவர்களுக்கு பலவிதங்களில் பயிற்சிகள் மாத்திரமே அதிகமாக கொடுக்கப்படுகிறது. அதிக மதிப்பெண்களைப்பெறும் மாணவர்களே சிறந்த அறிவாளி என்ற கருத்து இன்றளவிலும் நிலைத்து நிற்கிறது. ஆனால் மதிப்பெண்களுக்கும் மாணவர்களின் தனிப்பட்ட திறமை, ஆளுமை போன்றவற்றுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை.

ஆனாலும், சிந்தனைத் திறனற்ற அனிச்சையாக தேர்வுத் தாள்களில் மறுபதிவு செய்யும் கற்றல், பயிற்றுவிப்பு முறையே வெற்றி பெற்ற முறையாக இன்றுவரை ஏற்றுக்கொள்ளப்படுகிறது. நம்முடைய கவலையெல்லாம் கைநிறைய சம்பளம் வாங்க ஏதுவான ஒரு பட்டம்; அதற்கு விலையாக எதுவும் செய்யலாம் என்ற மனோபாவம். அன்மையில், இணையத்தில் வாசித்த ஓர் விடயத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கொல்கத்தாவில் நடைபெற்ற ஒரு சர்வதேச மாணவர் கூட்டத்தில், இந்தியாவின் அதிசிறந்த பாடசாலைகளில் இருந்தும் அதிக மதிப்பெண்கள் வாங்கிய 11ஆம், 12ஆம் ஆண்டு மாணவர்கள் பங்கேற்றனர்.. மாநாட்டின் தொடக்கத்தில், 'மைக்' வேலை செய்யவில்லை. உடனே அரங்கத்தில் இருந்த அனைவரும் தொழில்நுட்பவியலாளரைத் தேட, மாநாட்டிற்கு வந்திருந்த ஏழாம் வகுப்பு பயிலும் ஜப்பானிய மாணவனொருவன் எழுந்து சென்று, அதைச் சரிசெய்ய, இந்திய மாணவர்கள் அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். ஆக! ஏழாம் வகுப்பு மாணவனால் செய்ய முடிந்ததை, 12ஆம் வகுப்பு மாணவர்களால் ஏன் செய்ய இயலவில்லை என்ற கேள்வி அந்தக் கட்டுரையில் எழுப்பப்பட்டிருந்தது. ஆக, இதுதான் இன்றைய அதிக மதிப்பெண் வாங்கும் மாணவர்களின் நிலை! யதார்த்தத்துக்கு பயன்படாத வெறுமனே மதிப்பெண்களைப் பெறுவதை குறிக்கோளாகக்கொண்டு, மனப்பாடம் செய்து ஒப்புவிக்கும் ஏட்டுக்கல்வியின் விபரீதம் இல்லையா?

ஒரு பாடத்தில் முழுமையான மதிப்பெண் பெறுவது என்பது, அப்பாடத்தினை முழுமையாகத் புரிந்து படித்து கிடைப்பதால் வரவேண்டியது. ஆனால், அப்படியே மனப்பாடம் செய்து கொட்டிவிடுவதாலும் இந்த முழுமையான மதிப்பெண் கிடைக்கப்பெறும் என்பதையே அதிகமான மாணவர்கள் கைக்கொள்ளுகின்றனர்.

நடைமுறை வாழ்வின் சிக்கல்களை எதிர்கொள்வதற்கும் உதவுவதற்கும் பதிலாக, தவறான தேர்வுமுறையின் மூலம் மாணவர்கள் கடுமையான உளவியல் தாக்கத்துக்கு உள்ளாவதுடன் தேர்வில் தோல்வியடைந்தால் தற்கொலை செய்துகொள்ளும் எண்ணத்தையும் விதைத்துவிடுகிறது.

சிந்திக்கும் ஆற்றலே ஒருவரைச் சிறப்பாக்கும். ஆனால், சிந்திக்கும் ஆற்றலையே மழுங்கடிக்கும் தேர்வுமுறையே இன்றிருப்பதால், சவலைப் பிள்ளைகளாக மாணவர்களை மாற்றிக்கொண்டிருக்கிறோம். 35 மதிப்பெண் பெறுபவன் தேர்வில் தேறியவன். 33 மதிப்பெண் எடுத்தவன் தேர்வில் தவறியவன் என்று மதிப்பிட்டு, 'பெயில்' பண்ணியவனை அதேவகுப்பில் வைத்திருப்பது யோசிக்க வேண்டிய ஒரு விடயம் இல்லையா?

இந்தப் பாடசாலையில் இத்தனை 'A' சித்திகள், இத்தனை மாணவர்கள் பல்கலைக்கழகம் தெரிவாகினர் போன்ற பிரம்மிக்கவைக்கும் தேர்வு முடிவுகள், பெற்றோர்களுக்கும் கல்விக் கூடங்களுக்கும் மகிழ்ச்சியையும் பெருமையையும் அளித்தாலும், உண்மையில் இந்த மதிப்பெண் கலாசாரம் கல்வியின் தரத்தை பிரதிபலிக்கிறதா என்றால், விடை? அதிலும், கல்வி பெரும் சூதாட்டமாக மாறிவிட்ட இந்தக் காலகட்டத்தில், மதிப்பெண்களை எப்படி நோக்குவது? நடைமுறையில் இருக்கும் தேர்வுமுறை மாணவர்களின் திறன்களைக் கண்டடைவதாகவோ, வளர்ப்பதாகவோ, ஊக்குவிப்பதாகவோ இல்லாது முடக்குவதாகவும் ஏற்றத்தாழ்வை அப்படியே கொண்டு செல்வதாககவும் இருப்பதே இன்றைய கல்வியுலகம் எதிர்நோக்கும் பெரும் சவால் ஆகும். இத்தேர்வுமுரையானது, மாணவர்களின் அறியாமையை அளக்கிற அளவுகோலாக இருக்கிறதேயொழிய, அறிவை வளர்க்கும் அளவுகோலாக இருப்பதில்லை. அறியாமையை அகற்றி, நல்வழிப்படுத்துவதே கல்வியின் பயன்.

ஆனால், !நீ இவ்வளவு அறியாமையுடன் இருக்கிறாய்' என்று மாணவனை உளவியல் ரீதியாகத் துன்புறுத்தும் ஒரு முறை எவ்வாறு நன்மையைத் தருவதாக, அறிவை வளர்ப்பதாக, தனித்திறமைகளை அடையாளம் காட்டுவதாக இருக்கவியலும்? கற்றுக்கொள்வது என்பதை ஆனந்தமான ஒரு விடயமாகக் கருதுவதற்கு மாறாக, கசப்பாக்குவதே பெரும்பாலும் இன்றைய நிலை!

தேர்வு, தேர்ச்சி, பெறுபேறுகள் எல்லாமுமே ஒருவன் உயர்ந்தவன் என்றும், இன்னொருவன் ஏதோவொரு வகையில் அவனைவிடத் தாழ்ந்தவன் என்பதையும் சுட்டுகிறது மதிப்பெண்கள் அடிப்படையில்.

மனனம் செய்தல் என்பது, ஒரு காலத்தில் தனித்திறமையாகக் கருதப்பட்டு, நினைவாற்றலைப் பெருக்குவதற்காகவே செய்யுள்களையும் பாடல்களையும் அறிவியல், கணித விதிகளையும் உருவாக்கினார்கள். இதுதவிர கூர்ந்தறிதல், சிந்தித்தல், காரண காரியமுணர்தல், கவனித்தல் எனப்பல வகையான திறன்களும் உருவாக்கப்பட்டிருந்தன.

ஆனால், இன்றோ புரிந்துகொள்ளாமலேயே மனப்பாடம் செய்தல், கணித கணக்குகளைகூட அப்படியே மனப்பாடம் செய்து ஒப்புவித்தல், புத்தகத்தில் உள்ளதை பக்க எண் உட்பட அப்படியே எழுதுதல் போன்றனவே திறமைகளாக, தவறான புரிதலோடு, மதிப்பெண்களை நோக்கி ஓடும் பந்தயக் குதிரைகளாக, மாணவர்கள் தயார் செய்யப்படுகிறார்கள் என்பதை, நம்மில் எத்தனைபேர் ஒப்புக்கொள்கிறோம்?

100% தேர்ச்சி என்பதே, முழுமையான கல்விக்கான அளவுகோல் என்ற கருத்து திட்டமிட்டே உருவாக்கப்படுகிறது. ஆடம்பரமான தனியார் பாடசாலைகள், தனியார் வகுப்புகள், நுனி நாக்கு ஆங்கிலம் போன்றவையே சிறந்தது என்ற மாயத்திரை விரிக்கப்பட்டுள்ளது. அந்த மாயவலையின் கவர்ச்சியில் சிக்கிய பெற்றோர்களின் தொடர்ச்சியான விரட்டலில் மாணவர்கள், 'எதை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறோம்' என்ற புரிதலின்றியே ஓடிக்கொண்டிருக்கின்றனர்.

தம்பிள்ளைதான் அதிக மதிப்பெண்களை எடுக்கவேண்டும் என்ற பெற்றோரின் ஆசைக்கும், தம்மாணவர்களே அகில ரீதியில் முதல் மதிப்பெண் பெறவேண்டும் என்ற பாடசாலைகளின் போட்டி வெறிக்கும் ஆளாகி, கண்கள் கட்டப்பட்ட குதிரைகள்போல் எவ்வித தெளிவும் இன்றி, நாம் போட்ட பாதையில் ஓடிக்கொண்டிருக்கின்றனர் நம்மாணவர்கள்.

இன்றைய தலைமுறையினர் மதிப்பெண்களை மட்டுமே குறியாகக்கொண்டு ஒடுவதனாலேயே அதற்காக எதற்கும் துணியும் நிலைக்குச் சென்று, தேர்வுகளில் முறைகேடான முறையில் கொப்பியடித்து அல்லது ஆள்மாறாட்டம் செய்து, தேர்வெழுதி மாட்டிக்கொண்டு தம்சுயம் இழக்கிறார்கள். அதுமட்டுமன்றி, தேர்வில் தோல்வியடைந்தால் நெஞ்சுரமற்ற முடிவுகளை எடுக்கத் துணிகின்றனர். உள்ளார்ந்தமான பொறுப்புணர்வின்றி ஆசிரியர்களும் குதிரைக்கு கடிவாளம் போட்டதுபோல் தமக்குக் கொடுக்கப்பட்டுள்ள பாடத்திட்டத்தினை மாத்திரம் முடித்துக்கொடுக்கும் நோக்கம் தவிர்த்து, மாணவர்களின் கற்றலுக்கு உதவுகிற ஒரு நபராக மாறுவதுடன், அவர்களை வெறுமனே பரீட்சைக்கு மாத்திரம் தயார்படுத்தாது, மாணவர்களை தேடல் உள்ளவர்களாக மாற்றவேண்டும்.

அதற்கு, முதலில் ஆசிரியர்களும் தேடல் உள்ளவர்களாகத் தம்மை மாற்றிக்கொண்டு, வகுப்பறைக்குள் நுழையும்போது புதுப் புது விடயங்களை மாணவர்களுடன் பகிர்ந்துகொள்ளக் கூடியவராக இருக்கவேண்டும்.

நமது நாட்டின் வேலை வாய்ப்புக்கும், சமூக முன்னேற்றத்துக்கும் ஏற்ற கல்விமுறையே நமது வருங்கால சந்ததியினருக்கு உண்மையான வெற்றியைக் கொடுக்கும். அதுவரையில் அவர்கள் குதிரைப் பந்தயத்தில், ஒரு நேர்கோட்டில் ஓட மட்டுமே நாம் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருப்போம். அவர்களும் 'புரொய்லர்' கோழி போல,

# உங்கள் வாழ்வை எதில் முதலீடு செய்கிறீர்கள்?

**மனோகரன் இராமநாதன்**
அமைதி கல்வித் திட்ட வழி நடத்துநர், பிரேம் ராவத் நிறுவனம்
peaceispossible20@gmail.com



**நீங்கள் அறிவதற்கு மூன்று விடயங்கள் இருக்கின்றன. முதலாவதாக, விவேகத்திற்கும் அறிவுக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை அறிந்து கொள்ள வேண்டும்.**

அறிவைப் (Knowledge) பெற்றுக் கொள்ளுங்கள். அந்த அறிவை விவேகத்துடன் (wisdom) பாவிக்கவும். அறிவை பயிற்சிப்பது தான் விவேகம். உலகத்தில் தொழில்நுட்ப அறிவு இருந்தும், விவேகத்தைப் பாவிக்காதபடியால், அந்தத் தொழில்நுட்ப அறிவைப் பாவித்து மனிதர்கள், மனிதர்களையே அழிக்கின்றார்கள்.

விவேகத்தைச் சரியான முறையில் பயன்படுத்தினால் புவி வெப்பமயமாதலை தடுக்கலாம். அறிவை, விவேகத்துடன் பாவித்தால் மிருகங்களின் அழிவைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

> **அறிவை (Knowledge) விவேகத்துடன் (wisdom) பாவிக்கவும். அறிவை பயிற்சிப்பது தான் விவேகம். தொழில்நுட்ப அறிவு இருந்தும், விவேகத்தைப் பாவிக்காதபடியால், மனிதர்கள், மனிதர்களையே அழிக்கின்றார்கள்**

இற்றைவரை மனிதன் செய்த பிழையான காரியங்களை, அதே தொழில்நுட்பத்தின் உதவியுடன் சரி செய்து கொள்ளலாம். அறிவை விவேகத்துடன் பாவித்தால் நல்லது நடக்கும்.

இரண்டாவது, உங்களை நீங்களே அறிந்து கொள்ள வேண்டும். உங்களுடைய பலம் தான் என்ன? ஒரு விதையானது வரண்ட வனாந்தரத்தையே மாற்றக்கூடிய தன்மை உள்ளது. மழைவந்தால், ஒரு விதை வெற்று வனாந்தரத்தையே மாற்றக்கூடியது. உங்களை நீங்களே அறிவதால் இம்மாற்றம் சாத்தியமாகும்.

மூன்றாவது விடயம், பச்சாத்தாபத்தையும் அனுதாபத்தையும் பற்றியது. எல்லோரும் சமூக ஊடகங்களில் பங்கு பெற விரும்புகிறார்கள். மற்றவர்களுடன் தொடர்பு கொள்ள விரும்புகிறார்கள். உங்களுக்குத் தேவையானது இது அல்ல; உங்களுடைய இந்த உடம்பை, ஓடும் காருக்கு முன்னால் நீங்கள் போட விரும்பினால் போடலாம். அலைபேசியை பாவித்துக்கொண்டு, வீதிகளைக் கடக்கிறார்கள். தொழில்நுட்ப அறிவு இருந்தும், மனிதன் விவேகத்தை அங்கு பாவிக்கவில்லை. பாரிஸில் உள்ள வாகனப் போக்குவரத்து மிகவும் மோசமாகி விட்டது. அங்கு, அவர்கள் ஏன் 'ஹோரர்ன்' அடிகிறார்கள் தெரியுமா?

ஏனெனில், தன் முன்னால் உள்ள கார் புறப்பட்டு போனாலும், பின்னாலுள்ள காரிலிருந்து ஹோரர்ன் அடித்த பின்பும் தங்களது காருக்குள் குனிந்தபடி, அலைபேசியைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். விபத்துக்கு இது அடிகோலும். இவர்களின் விளக்கமின்மையைத் தீர்ப்பதற்கு, பச்சாத்தாபம் (empathy) தான் தேவை; அனுதாபம் (sympathy) அல்ல .

சமூகம் ஏற்றுக் கொள்ளப்படும் ஒருவனாக நீங்கள் இருப்பதற்கு, பச்சாத்தாபம் இருக்க வேண்டும்; அனுதாபம் அல்ல. பச்சாத்தாபம் மக்களிடம் இருந்தால், இந்த உலகத்தில் போர்களைத் தவிர்க்கலாம். ஒருவனுடைய நிலையை, உங்கள் நிலையாக உணர்ந்து, அவனுடைய சூழ்நிலையை நீங்கள் விளங்கினால் அவனிடம் பச்சாத்தாபம் கொள்வீர்கள்.

மக்கள் பச்சாத்தாபப்படுவதில்லை. சில நாடுகளில் பச்சாத்தாபம் என்ற சொல்லுக்கே இடமில்லை. பச்சாத்தாபம் இல்லாத படியால்தான், நாங்கள் கடவுளின் பெயரில், சந்தோசத்தின் பெயரில், சமயங்களின் பெயரில் அமைதியின் பெயரில் போராடுகிறோம்.

மக்கள் ஒன்றுபட வேண்டிய இந்த இடத்தை, தங்களுக்கிடையே போரிடும் இடமாக ஆக்கி விட்டார்கள். பச்சாத்தாபம் என்பது மனிதர் மட்டுமல்லாமல், மிருகங்களிடமும் காட்ட வேண்டியது ஒன்று. அவ்வாறு செய்வதால், மிருகங்கள் அழிவடையாது.

இந்தக் காலத்தில், சூப்பர் மார்க்கெட்டில் உணவு அளவுக்கு அதிகமாக இருக்கும். அளவுக்கு அதிகமான உணவை என்ன செய்வதென்று தெரியாமல் அதை எறிந்து விடுகிறார்கள்.

இவ்வாறு உணவு மேலதிகமாக இருக்கையில், மக்கள் சிலர் உணவுக்காக வேட்டையாடவும் போகிறார்கள். வேட்டையாடப் போனால் மிருகங்களுக்கு சமனாக துப்பாக்கி இல்லாமல் நாமும் போகலாமே! நீங்கள் வேட்டையாட போகலாம். ஆனால் உங்களுடைய, குடும்பத்துக்கு நல்ல காப்புறுதிக் கொள்கையை எடுத்து வைத்துக் கொள்ளவும். ஏனெனில் நீங்கள் சிங்கத்திடமிருந்து திரும்பி வரக் கூடிய சாத்தியம் இருக்காது. ஆயிரக்கணக்கான வருடங்களாகப் பாவித்து வரும் துப்பாக்கிகள் கொண்டு சிங்கத்தை வேட்டையாட பார்க்கிறீர்கள். துப்பாக்கியால் நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள் என்று சிங்கத்துக்கு தெரியாது

துப்பாக்கி இல்லாமல் நீங்கள் சிங்கத்திடம் சண்டை போடப்

> **ஒரு விதையானது வரண்ட வனாந்தரத்தையே மாற்றக்கூடிய தன்மை உள்ளது. மழைவந்தால், ஒரு விதை வெற்று வனாந்தரத்தையே மாற்றக்கூடியது. உங்களை நீங்களே அறிவதால் இம்மாற்றம் சாத்தியமாகும்**

போனால் சிங்கத்துக்கு நீங்கள் ஒரு பற்பசை ஆகிவிடுவீர்கள். அதே மாதிரி, நீங்கள் கடலுக்கு உள்ளே ஆயுதம் இல்லாமல், திமிங்கிலத்துடன் சண்டை போடப் போனால், திமிங்கிலத்திற்கு உங்களைக் காண சந்தோசமாக இருக்கும்.

இவற்றால் எனக்கு ஒரு பிரச்சனையும் இல்லை. ஆனால், நான் இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருப்பதால் இதைப் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. இவ்வுலகத்தில் நடப்பது அவ்வளவு நல்லதாகத் தெரியவில்லை.

> **சமூகம் ஏற்றுக் கொள்ளப்படும் ஒருவனாக நீங்கள் இருப்பதற்கு, பச்சாத்தாபம் இருக்க வேண்டும்; அனுதாபம் அல்ல. பச்சாத்தாபம் மக்களிடம் இருந்தால், இந்த உலகத்தில் போர்களைத் தவிர்க்கலாம். ஒருவனுடைய நிலையை, உங்கள் நிலையாக உணர்ந்து, அவனுடைய சூழ்நிலையை நீங்கள் விளங்கினால் அவனிடம் பச்சாத்தாபம் கொள்வீர்கள்**

நாம் இவ்வுலகத்தை மாற்ற முன்பு, நாம் மாற வேண்டும். மற்றவர்கள் மாற வேண்டும் என்று தான் நாம் கூறுவோம். ஆனால் நாங்களும் மற்றவர்கள் போலத்தான் உள்ளோம்.

உங்களை நீங்களே உணர்வது பெறுமதி மிக்கது.

உங்கள் வனாந்திரத்தில் அந்த விதை உண்டு. அங்கு மழை பெய்யத் தான் போகின்றது. அவ்வாறு மழை பெய்யும் பொழுது, உங்களுடைய அந்த வனாந்திரம் மலரத்தான் போகின்றது. நீங்கள் தெய்வீகத்தின் கடைக்குள் தான் இருக்கிறீர்கள். இது அழகானது;

> **சகல அறிவையும் விவேகத்துடன் பாவித்தால், வாழ்வில் நல்ல மாற்றங்களுக்கான சாத்தியங்களுக்கு முடிவில்லை. வனாந்தரம் பூக்கும் பொழுது, எவ்வளவு அழகாக இருக்கும்?**

அமைதி அங்கு உள்ளது.

தெய்வீகம் அங்கு இருக்கின்றது. தெய்வம் எங்கு இருக்கின்றது என்று கேட்கிறார்கள்? எங்கிருந்து இந்தக் கேள்வி வருகின்றது? இந்தக் கேள்வி உங்கள் மனதிலிருந்து வருவதில்லை. அது உங்கள் உள்ளத்தில் இருந்து வருகின்றது.

துக்கத்திலும் பார்க்க, சந்தோசமாக இருப்பது தான் முக்கியம். சந்தோசத்துக்கு எல்லையே இல்லை. மற்றவர்கள் சொல்லாமலே உங்களுக்கு இது தெரியும். ஒருவரும் கோவிலுக்கோ, தேவாலயத்துககோ போய், தனக்கு சந்தோசம் அதிகமாகிவிட்டது, சந்தோசம் போதும் என்று பிரார்த்திப்பது இல்லை.

நீங்கள் அறிந்ததை விட, அறியாத விடயங்கள் தான்; அதிகம் என்பது உங்களுக்குத் தெரியும்.

தெய்வீகத்தின் கடையில், அழகான விடயங்கள் இருக்கின்றன. எனினும்; தெய்வீகத்தின் கடையில் ஆனந்தத்தின் விதைகள் மட்டுமே உங்களுக்குத் தரப்படும். அதைப் பற்றி ஆச்சரியப்படத் தேவையில்லை. நீங்கள் ஆனந்தத்தின் விதைகளில் முதலீடு செய்யத் தயாரா?

சகல அறிவையும் விவேகத்துடன் பாவித்தால், வாழ்வில் நல்ல மாற்றங்களுக்கான சாத்தியங்களுக்கு முடிவில்லை.

வனாந்தரம் பூக்கும் பொழுது, எவ்வளவு அழகாக இருக்கும். இந்த வனாந்திரம் பூக்கட்டும். வாழ்வு மலரச்சி அடைவதைப் பற்றியதுதான் இந்த விடயம்.



## பனம்காமம், மூன்றுமுறிப்பு கிராமங்கள்:

# ஏன் இந்த நிலை?

சுப்பிரமணியம் பாஸ்கரன்

மக்களின் அடிப்படைத்தேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், ஓரளவு வசதி படைத்தவர்கள், தங்களின் தேவைகளை நோக்கி நகர்வதன் மூலம், வன்னியில் மிகவும் பழைமை வாய்ந்த பல விவசாயக் கிராமங்கள் காடுகளாகவும் காட்டுவிலங்குகளின் ஆக்கிரமிப்புக்கும் உள்ளாகி வருகின்றன.

இதனால், இவ்வாறான கிராமங்களில் வாழ்ந்து வரும் ஏனைய வறிய மக்கள், வாழ்வில் அன்றாடம் பெரும் கஸ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில், மிகவும் பின் தங்கிய பிரதேசமாகக் காணப்படும் மாந்தைகிழக்கு பிரதேசத்தில், பனங்காமம், மூன்று முறிப்பு போன்ற பழைமை வாய்ந்த கிராமங்களில் இருந்து, கடந்த 10 வருடங்களாக, வசதி வாய்ப்புகளை நோக்கி, மக்கள் குடி பெயர்து செல்லும் நிலை காணப்படுகின்றது.

**முல்லைத்தீவில் பின் தங்கிய பிரதேசமான மாந்தைகிழக்கு பிரதேசத்தில், பனங்காமம், மூன்று முறிப்பு போன்ற பழைமை வாய்ந்த கிராமங்களில் இருந்து, கடந்த 10 வருடங்களாக, வசதி வாய்ப்புகளை நோக்கி, மக்கள் குடி பெயர்து செல்லும் நிலை காணப்படுகின்றது**

குறிப்பாக, இந்தப் பிரதேசங்களில் மாணவர்களுக்கான உரிய கல்வி வசதி, மருத்துவ வசதி, போக்குவரத்து வசதி போன்றவை இன்மை என்பன, இவ்வாறு குடிபெயர்வதற்குப் பிரதான காரணிகளாக அமைந்துள்ளன.

மாந்தைகிழக்கில் 1962ஆம் ஆண்டுகளுக்கு பிற்பகுதியில், பாண்டியன்குளம், கரும்புள்ளியான், விநாயகபுரம், பாலிநகர், கொல்லவிளான்குளம், சிவபுரம் போன்ற கிராஙம்கள் உருவாகுவற்கு முன்னுள்ள வரலாற்றுத் தொன்மை கொண்ட, பனங்காமம், மூன்று முறிப்பு போன்ற கிராமங்கள், எதிர்காலத்தில் இல்லாது போய் விடுமோ என்ற கேள்விகள் எழுந்துள்ளன.




பனங்காமம், மிகவும் பழைமையான வன்னியின் பழம்பெரும் கிராமமாகும். அதாவது, கி.மு ஏழாம் நூற்றாண்டு முதல் இலங்கையின் கரையோர மாகாணங்களில், பெரும் கற்காலப் பண்பாட்டு மக்கள் குடியேறி வாழ்ந்தனர் என்றும் அக்காலப்பகுதியில் பண்டமாற்று முறைமை உட்பட, குறுநில அரசுகள் உருவாகின என்றும் அறியமுடிகின்றது.

அவ்வாறு உருவாகிய கிராமங்களில், ஒன்றுதான் பனங்காமம் பற்று என்றும் 17ஆம் 18ஆம் நூற்றாண்டுகளில் ஒல்லாந்தர், 'அடங்காப்பற்று' என்பதை, வன்னி என்று குறிப்பிட்டனர் என்றும் இதில் பனங்காமம், கரிக்கட்டுமூலை, கருநாவல் பற்று, முள்ளியவளை மேல் பற்று, தென்னைமரவாடி என்ற ஆறு பிரிவுகள் காணப்பட்டன என்றும், பனங்காமம் பகுதியில் அமைந்துள்ள பஞ்சிங்கேஸ்வரர் கோவில் வரலாற்று நூலின் வாயிலாக அறியமுடிகின்றது.

இதேவேளை, 'பாணன்கமம்' என்ற பெயரே காலப்போக்கில் 'பனங்காமம்' என்று மருவி வந்துள்ளதையும் அறியமுடிகின்றது. அதாவது, இராவனேஸ்வரனின் தம்பியின் பரம்பரையினர், இலங்கை இராசதானியில் ஆட்சி செய்த காலத்தில் இந்தியாவில் இருந்து வந்த பாணன் குலத்தைச்சேர்ந்த அந்தகன் ஒருவர், அரசன் முன்னிலையிலே யாழ் வாசித்து பரிசில் பெற்றான் என்றும் அவனுக்கு பரிசாக வழங்கப்பட்ட கமம் என்பதே மருவி, காலப்போக்கில் பனங்காமம் என்று பெயர் பெற்றுள்ளதாகவும் வரலாற்று ஆய்வுகள் கூறுகின்றன.

இவ்வாறு வரலாற்றுத்தொன்மை கொண்ட பனங்காமம், மற்றும் அதனை அண்டியப பழம் பெரும் விவசாயக் கிராமங்களான மூன்றுமுறிப்பு, வீரப்பராயர் குளம், இளமருதன்குளம், கொம்புவைத்தகுளம் போன்ற கிராமங்களுக்கான பிரதான போக்குவரத்து பாதையில், எந்தவித போக்குவரத்து வசதிகளும் இல்லை.

மாறாக, மாலை நான்கு மணியில்இருந்து மறுநாள் காலைவரையும் காட்டு யானைகளின் ஆக்கிரமிப்பு, கிராமங்களில் கல்வி வசதிகள் எதுவுமில்லை. மருத்துவ வசதிகள், அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யவும் விவசாய விளை பொருட்களைச் சந்தைப்படுத்தவும் போக்குவரத்து வசதியில்லை. சீரான வீதியின்மை என்ற போராட்டத்துக்கு மத்தியில் 20, 25 கிலோமீற்றர் சென்று அவற்றை பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

**வருமானம் குறைந்த மற்றும் வறுமை நிலையில் வாழும் பல குடும்பங்கள், குறித்த கிராங்களில் வாழ்ந்து வரும் நிலையில், அன்றாடத் தேவைகளுக்காகவும் பிள்ளைகளின் கல்விக்காகவும் மருத்துவத்துக்காகவும் பல்வேறு துன்பங்களை எதிர்நோக்கி வருகின்றனர்**

இவ்வாறான நிலையில், மேற்படி பழம் பெரும் கிராமங்களில் மீள்குடியேறி வாழ்ந்த 80 சதவீதமான குடும்பங்கள், அண்மைக் காலமாக இங்கிருந்து இடம்பெயர்ந்து வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற மாவட்டங்களுக்கு குடிபெயர்ந்துள்ளன.

இந்நிலையில், வருமானம் குறைந்த மற்றும் வறுமை நிலையில் வாழும் பல குடும்பங்கள், குறித்த கிராங்களில் வாழ்ந்து வருகின்றன. இங்கிருந்து பெருமளவான குடும்பங்கள் வசதி வாய்ப்புகளைத் தேடிச்சென்றுள்ள நிலையில், மேற்படி குடும்பங்கள் அன்றாடத் தேவைகளுக்காகவும் பிள்ளைகளின் கல்விக்காகவும் மருத்துவ தேவைகளுக்காகவும் அன்றாடம் பல்வேறு துன்பங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனை விட, இரவு வேளைகளில் காட்டு யானைகளின் தொல்லை, வாழ்வாதார பயிர்களைப் பாதுகாக்க முடியாத நிலை, ஏனைய விலங்குகளால் தொல்லை உயிரச்சுறுத்தல்கள் என்று, பல்வேறு துன்பங்களை இக்கிராமங்களில் வாழும் மக்கள், அன்றாடம் எதிர்நோக்கி வருகின்னர்.

இங்கு, அபிவிருத்தி என்பதில் மின்சாரம் மாத்திரமே 98 சதவீதமான மக்களுக்கு கிடைத்திருக்கின்றது. ஏனைய தேவைகள் என்பது, இது வரை நிறைவேறியதாக கருதமுடியாது.

இவ்வாறான கிராமங்களில், அடிப்படைப் போக்குவரத்து வசதிகள் உள்ளிட்ட தேவைகளை நிறைவு செய்து தருமாறு, மேற்படி கிராம மக்கள் முன்வைக்கும் கோரிக்கைகள் எப்போது நிறைவேற்றப்படும்.




# 'வங்கர்' கிராமம்

## 'அனைத்தும் வரும் வரும்'; 'ஆனால், எதுவும் வரவில்லை"

வ. சக்திவேல்
shagthivel@gmail.com

"எமது கிராமம், மட்டக்களப்பு மாவட்டமாக இருந்தாலும், அம்பாறை மாவட்டத்தின் ஓரமாக, காடு சார்ந்த சூழலில் அமைந்துள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்துக்குள் இருக்கும் நாம், குடிநீருக்காக அருகிலுள்ள அம்பாறை மாவட்டத்திற்குச் சென்றுதான் குடிநீரைப் பெற்றுவரவேண்டியுள்ளது. அந்தப் பகுதி, அதாவது எமது கிராமத்தின் ஒருபகுதியில், சகோதர சிங்கள மக்களும் வாழ்கின்றார்கள். அவர்கள் வாழும் பகுதியில், அம்பாறையிலிருந்து வரும் இக்கினியாகல குளத்திலிருந்து நீர், வாய்க்கால் வழியாகச் செல்வதால், அம்மக்களுக்கு நீர்ப் பிரச்சினை கிடையாது. ஆனால், எமது பகுதியில் அமைந்துள்ள வாய்க்கால்கள் அனைத்தும், தூர்ந்துபோய், வரண்டு காணப்படுகின்றன. ஒரு கிராமத்தில், இரு இனங்கள் வாழ்ந்தாலும், இரண்டும் இரு வேறு பிரிவுகளாகத்தான் பார்க்கப்படுவதாக நாம் உணர்கின்றோம். அருகிலுள்ள சகோதர இன மக்களுக்கு நீர் விநியோகிக்கப்படுவது போல், எமக்கும் வழங்கினால் நாம் குடிநீருக்காக அலையவேண்டியதில்லை" என்கின்றனர் கிராமம் 25 மக்கள்.

இன்று நேற்றல்ல; இவர்கள் இக்கிராமத்தில் குடியேறிய காலமிருந்து, குடிநீர் பிரச்சினையை எதிர்கொண்டுதான் வருகின்றார்கள். மிகவும் தொலைதூரம் சென்று, தலையில் வைத்து குடிநீரைப் எடுத்து வருவதால், தாம் பல உபாதைகளுக்கும் உட்படுகின்றோம் எனத் தெரிவிக்கும் இவர்கள், தமது கிராமத்தை ஊடறுத்துச் செல்லும் வாய்க்கால் ஊடாக, நீர் கிடைக்குமாக இருந்தாலே போதும் என்கின்றனர். நாம், எமது மேட்டு நிலத்தில் தொழில் செய்து, பிழைத்துக் கொள்வோம். எமது கிராமத்திலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் குழாய் மூலமான குடிநீர் வழங்கப்படுகின்றது. அதனைக்கூட எமக்கு பெற்றுத்தருகின்றார்கள் இல்லை என ஆதங்கம் தெரிவிக்கின்றனர்.

"இதனை நீர்பாசனத்திணைக்களத்தினர் வந்து பார்வையிட்டும் இன்னும் சீர் செய்து தருகின்றார்களில்லை, பிரதே செயலாளருக்குக் கடிதங்கள் கொடுதுள்ளோம்.

"இவைகள் அனைத்தையும் உற்றுநோக்கிப் பார்க்கும் போது, எமது கிராமத்திலுள்ள தமிழ் மக்களை வேறுபடுத்திக் காட்டுவதாகத்தான் நாம் உணர்கின்றோம். அதிகாரிகளிடம் பலமுறை எமது கிராமத்தின் பிரச்சினைகள் குறித்து மேலதிகாரிகளுக்கு அறிவித்தால், 'அனைத்தும் வரும், வரும்' எனத் தெரிவிக்கின்றார்களே தவிர, எதுவும் வந்ததாகத் தெரியவில்லை" என 25ஆம் கிராமத்திலுள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

"எங்கள் கிராமத்தில், மின்சார வசதி இருந்தாலும் வீட்டு மின் இணைப்பைக்கூடப் பெறுவதற்கு எம்மிடம் வசதிகள் இல்லை. அதனைப் பெற்றுத் தருவதற்கும் யாரும் முன்வருகின்றார்களும் இல்லை. வீதிகளும் குன்றும் குழியுமாக, மோசமாகப் பழுதடைந்து காணப்படுகின்றன. இதனால் நடந்துகூடச் செல்லமுடியாத நிலைமை காணப்படுகின்றது. அண்மையில், ஒரு பெண்ணுக்கு பாம்பு தீண்டியது; அவரை வைத்தியசாலைக்கு இந்த வீதியால் எடுத்துச் செல்வதற்கு மிகுந்த சிரமப்பட்டோம்; வைத்தியசாலைக்குச் சென்றவேளை அப்பெண்ணுக்கு விசம் ஏறிவிட்டது. எனினும், தெய்வாதீனமாக அவர் உயிர் பிழைத்துவிட்டார்.

"எங்கட கிராமத்தில் கடந்த அரசாங்கம் இருந்த காலத்தில் செமட்டன வீட்டுத்திட்டத்தின் கீழ் வீடமைப்புத் திட்டம் ஒன்று நிருமாணிக்கப்பட்டு அது இன்றுவரைப் பூர்த்தி செய்ய முடியாமல் அரைகுறாகக் காணப்படுகின்றது. இது தொடர்பில் யாரும் கவனத்தில் எடுக்கின்றார்கள் இல்லை. தலையில் வைத்து தண்ணிக்குடத்தை சுமந்து சுமந்து தலை விறைத்துவிட்டது. "எங்கட கிராமம் வங்கர்ல கிடக்கிறமாதிரி உள்ளது"என 70 வயதுடைய பெண் ஒருவர் தெரிவிக்கின்றர்.

**மட்டக்களப்பு மாவட்டத்துக்குள் இருக்கும் நாம், குடிநீருக்காக அருகிலுள்ள அம்பாறை மாவட்டத்திற்குச் சென்றுதான் குடிநீரைப் பெற்றுவர வேண்டியுள்ளது**

"இந்தக் கிராமத்தில், முதல் தலைமுறை மறைந்து, இரண்டாவது தலைமுறைதான் வாழ்ந்து வருகின்றது. இரண்டு தலைமுறைகள் கடக்கின்ற நிலையிலும், இந்தக் கிராமத்திலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கவிலலை என்றால், இனி நாங்கள் என்ன செய்வதென்று தெரியாதுள்ளது" என,கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மனிதன், ஓரளவுக்கேனும் தானும் தனது குடும்பமும் என உழைத்து, உண்டு ஆராக்கியமாகவும் நிம்மதியாகவும் வாழ்வதற்கு அவன் சார்ந்த சூழலை அமைத்துக் கொடுக்க வேண்டியது துறைசார்ந்தவர்களின் தலையாய கடமையாகும்.

மட்டக்களப்பு மவாட்டத்தின் போரதீவுப்பற்றுப் பிரதேசத்துக்கு உட்பட்ட றாணமடு கிராம சேவையாளர் பகுதிக்கு உட்பட்டதே 25ஆம் எனும் கிராமமாகும். அங்கு 20 தமிழ் குடும்பங்களும் 42 சிங்களக் குடும்பங்களும் வாழ்ந்து வருகின்றார்கள். யுத்தகலத்தில் பெரிதும் பாதிக்கப்பட்ட இக்கிராமம், அன்று தொடக்கம் இன்றுவரை ஒரு பரிணாமத்தை எட்டாத நிலையிலேயே இருக்கிறது.

யுத்த காலத்தில், பலமுறை இடம்பெயர்ந்து, மீளக் குடியமர்ந்துள்ள போதிலும் அங்குள்ள மக்களுக்கு சுகாதார வசதிகள், போக்குவரத்து வசதி, வீதி புனரமைப்பு, குடிநீர், தபாலக வசதி உள்ளிட்ட எதுவுமற்ற நிலையில் இவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

25 ஆம் கிராமத்திலுள்ள சிங்கள மக்களிடம் வினவியபோது, " சகோதர தமிழ் மக்கள், மிகுந்த அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வாழ்கின்றார்கள். நாம் அருகிலிருந்து கவனிக்கின்றோம். அந்த மக்கள் மத்தியில், இள வயது திருமணம், முறையான கல்வியின்மை, ஆரோக்கியமின்மை, குடிநீர்ப் பிரச்சினை போன்ற பல தேவைகளைத் தாங்கியவாறு, அவர்கள் சகித்துக் கொண்டு வாழ்ந்து வருகின்றார்கள். அந்த மக்களுக்கு யாராவது உதவுவதற்கு முன்வர வேண்டும்" என, சிங்கள மக்களின் ஆதங்கம் காணப்பட்டது.

"காட்டு யானைகளைத் தடுப்பதற்கு எல்லைப்பகுதியில் மின்சார வேலி அமைக்கும் செயற்பாடுகளுக்குத் திட்டமிடல்கள் இடம்பெற்றுள்ள, தற்போது வரட்சி அதிகமாக உள்ளதனால் போரதீவுப்பற்றுப் பிரதேசத்தில் அதிகம் குடிநீர் தட்டுப்பாடு நிலவும் கிராமங்களுக்கு குடி நீரை வழங்குவதற்காக நீர்தாங்கிகளை மாவட்ட செயலகத்தினூடாக போரதீவுப்பற்றுப் பிரதேச சபைக்கப் பெற்றுக்கொடுத்துள்ளோம். கடந்த அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட செமட்ட செவன வீட்டுத்திட்டத்தின் கீழ் தமது பிரசேத்திற்கு 29 திட்டங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன அதில் இதுவரையில் 7 செயற்றிட்டங்கள் மாத்திரமே பூரணப்படுத்தப்பட்டுள்ளன. மிகுதியான வீட்டுத்திட்டங்கள் அனைத்தும் அரைகுறையாகத்தான் உள்ளன. இதுபற்றி நாம் மாவட்ட செயலகத்திற்கும், வீடமைப்பு அதிகார சபைக்கும் அறிவித்துள்ளோம். மேலும் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் ஏனைய திட்டங்களை முன்னுரிமைத் தேவகள் அடிப்படையில் கிராமங்கள் தோறும் அமுல்ப்படுத்தப்பட்டு வரப்படுகின்றன" என போரதீவுப்பற்றுப் பிரதேச செயலாளர் ஆர்.இராகுலநாயகி தெரிவித்தார்.



கடந்த காலங்களிலிருந்து பல்வேறு கோரிக்கைகளுக்காக தமிழர்களும் சிங்களவர்களும் சண்டை பிடித்து, இறுதியில் ஆயுதம் ஏந்தி போராடி ஆளுக்கு ஆள் பகைமையை வளரத்தார்கள் என்பதை சர்வதேசமே அறியும். ஆனாலும் இலங்கையில் சிறியதொரு குக் கிராமத்தில் தமிழர்களும் சிங்களவர்களும், மிகவும் ஒற்றுமையுடன் வாழ்ந்து வரும் இக்கிராமத்திலுள்ள தமிழ் மக்களின் அபிவிருத்தி என்பது, எட்டாக்கனியாக இருப்பது மிகவு வேதனைக்குரியதாகும்.

அடிப்படை வசதிகள் அற்றுக் காணப்படும் இக்கிராம மக்களுக்கு ஆதாரம் வழங்குவது சம்மந்தப்பட்டவர்களின் தலையாய கடமையல்லவா? உரிமைகள் மறுக்கப்படுகின்றபோது அதனைத் தட்டிக்கேட்டாலும் அதற்கு தட்டிக்கழிப்பது பதிலாக அமைந்துவிட முடியாது.

எனவே போதீவுப்பற்றுப் பிரதே செயலாளர் தெரிவித்தது போன்று மக்களின் முன்னுரிமைத் தேவைகள் அடிப்படையில் செயற்பட்டு சமாதானம், இன ஒற்றுமையில் திகழும் 25 ஆம் கிராம மக்களின் துயரங்களைத் துடைக்க அரச அதிகாரிகளும் தனவந்தர்களும் புலம்பெயர் அமைப்புகளும் முன்வரவேண்டும்.

'காடும் காடு சார்ந்த முல்லை நிலத்தில்' தினத் தினம் தமது வாழ்வுக்காய் போராடும் மக்களின் துயரங்களில் ஒரு சிறு அளவேனும் துடைப்பதற்கு யாரேனும் முன்வருகின்றார்கள் என்ற வார்த்தைகள் கேட்டாலே அது, அக்கிராம மக்களுக்குத் தேனமிர்தமாய் இருக்கும் என்பதுபோல், அங்குள்ளவர்கள் தமது வாழ்வைக் கழித்து வருகின்றனர்.

எனவே, 'அறம் செய்ய விரும்பு' என ஔவையார் கூறியது போன்று, உதவுவதற்கு மனம் படைத்தவர்கள் 25 ஆம் கிராமத்துக்குச் சென்று, அங்குள்ள மக்களின் துயரங்களில் முடியுமானவற்றை செய்துகொடுக்க வேண்டும் என்பதையே, அந்தக் கிராம மக்கள் எதிர்பார்க்கின்றனர்.





# இரு சாரார்களையும் மனம்நோகடிக்காது இருந்திருந்தாலே மகிழ்ச்சி

பெயருக்காகவும் வியாபாரத்துக்காகவும் சில தினங்கள் அனுஷ்டிக்கப்படுகின்றன. அவற்றில் பல, கொண்டாட்டங்களுடன் மட்டுப்படுத்தப்பட்டு விடுகின்றன. ஆனால், பன்னாட்டு சிறார்கள் தினம், பன்னாட்டு முதியோர் தினமான நேற்று (ஒக்டோபர் 1ஆம் திகதி) எத்தனை பேர், அவ்விருசாராரையும் வாழ்த்தி, மகிழ்வித்து இருப்பர்? இன்றேல் மனம்நோக்கடிக்காமல் இருந்திருப்பர் என்பதற்கெல்லாம் ஒவ்வொருடைய மனமே சாட்சியாகும்.

பத்துப் பிள்ளைகளைப் பெற்று வளர்த்துவிடுவோம்; ஆனால், வயதான தாய், தந்தையைத் தங்களால் பார்த்துகொள்ளவே முடியாதுள்ளதென, சொந்தப்பிள்ளைகள் புலம்புவதை பலரும் கேள்விப்பட்டிருப்பீர்கள். சில வீடுகளில் வயதான மாமனார், மாமியாரின் நிலைமையை கேட்டறிந்துகொள்ளவே தேவையில்லை. குழந்தை உள்ளம் கொண்ட அவ்வாறானவர்களையும் சிறார்களையும் மதித்துக் கொண்டாடுவதற்கே நேற்றைய நாள் விசேடமாகக் குறிக்கப்பட்டுள்ளது.

இங்கு மட்டுமன்றி, முழு உலகிலும் இரண்டு தினங்கள் நேற்று (01) கொண்டாப்பட்டன. தாய், தந்தையின் அரவணைப்பைப் பெறுவதில் சிறுவர்களின் மனம் ஆனந்தம் கொள்ளும். மண்ணில் பிறந்து மடியப்போகும் தருவாயில் அன்பு ஒன்றைத் தவிர வேறெதையும் எதிர்பார்க்காமல் இருப்பவர்கள் முதியோர். அவ்விருசாரையும் பாதுகாத்து மதிப்பளிக்கவேண்டும்.

தங்களுடைய பிள்ளைகள் யாரிடமும், எதற்காகவும் ஏமாந்துவிடக்கூடுமென மனதார நினைக்கும் முதியோர்கள் வீதியோரங்களிலும் இடுகாடுகளிலும் அநாதரவாக கைவிடப்பட்டுள்ளனர். திக்குத்தெரியாது தவித்துநிற்கும் அவ்வாறானவர்களுக்கு 'முதியோர் இல்லங்களே' இறுதியில் பாதுகாப்பு அரண்களாக இருக்கும். ஏமாற்றி, வாகனங்களில் ஏற்றிவந்து, கண்களைக்கட்டி காட்டுக்குள் விட்டுவிடுவதைப்போல, விட்டுச்செல்லும் தங்களுக்கும் இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம், யாருக்குமே துளியளவேனும் ஏற்பட்டிருக்காது. "யார் பெத்த பிள்ளையோ" எனப் பரிதாபப்படுமளவுக்கு, சிறார்கள் அநாதையாக்கப்படுகின்றனர்; துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்களுடன் சிறுவர்களால் மேற்கொள்ளப்படும் குற்றங்களுக்கும் குறைவில்லை. பக்கத்து வீட்டு குளியலறையில் தன்னையொத்த வயதுடைய சிறுமியொருத்தி குளிப்பதை, திறன்பேசிகளில் படமெடுத்து இரசித்து மகிழும் அளவுக்கு, சிறுவர்களின் மத்தியில் தீய சிந்தனைகள், எண்ணங்கள் வார்க்கப்பட்டுள்ளன. இது எதிர்காலத்தின் மீதான நம்பிக்கையை சிதைவடையச் செய்யும். நீதிமன்ற விசாரணைகளின் போது சிறுவர்களை சாட்சியாளர்களாக நீதிமன்றத்துக்கு அழைப்பதை தடுக்கும் சட்டம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

சிறுவர் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காக எதிர்காலத்தில் சிறுவர்கள் தொடர்பான குற்றவியல் வழக்குகளின் போது நபர்களின் சாட்சியங்களை விடவும் தொழில்நுட்ப சாட்சியங்களைப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளமை நல்லதோர் ஆரம்பம்.

சிறுவர்களுக்கென ஓர் உலகமிருக்கிறது. அவ்வுலகை அபகரித்துவிடக்கூடாது. அன்பை மட்டுமே எதிர்பார்த்து, இன்னும் குழந்தைகளாக இருக்கும் முதியோரையும் ஒதுக்கிவைத்து விடக்கூடாது. சிறுவர்களை பாதுகாத்து, வயதான குழந்தைகளை மதிக்க உறுதி பூண்டிருந்தால் அதுவே நிம்மதி.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

சிந்தனை ஓட்டங்கள் விஸ்தீரணம் அடையும்போது, அதனோடு இணைந்தவர்கள் பரோபகாரிகளாகி விடுகின்றனர். இது இயல்பான நிலைதான். நற்சிந்தனையுடன் தம்மைச் சுற்றியிருப்பவர்களின் நலன்பற்றி, அக்கறை கொண்டால், அதுவே அவர்களின் பரந்த நற்பண்பை தானாகவே மாற்றிவிடுகின்றது.

எவராலுமே சிறப்பான வாழ்வை உருவாக்க முடியும். ஆனால், நடைமுறை வாழ்வில் பலவித பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. எவருமே துன்பங்களை விரும்புவதில்லை. எனினும், இன்பங்களும் துன்பங்களும் வந்தபோன வண்ணமே உள்ளன.

வாழ்க்கை என்பது அற்புதமான தேன்கூடு. பல்லாயிரம் தேனீக்கள், பலகோடி மலர்களில் இருந்து, தேனைச் சேகரிக்கின்றன. உழைப்பின் முழுவடிவத்தையும் இந்தச் செயற்பாடு உருவகிக்கின்றது. தேனீக்களின் இந்தத் தொண்டுக்கு, நிகர் பிறிதொன்றுமில்லை. இதேபோலவே, மனித இனம், தன்னை வளம்படுத்தப் போராடிக்கொண்டே இருக்கின்றது. இந்தப் போராட்டத்தை, ஆதரிக்க வேண்டியது நம்மவர்களின் தலையாய கடமையாகும்.

எனவே சிந்தனையாளர்கள் மனித இனத்தின் மீது அக்கறை செலுத்துவதும். அறிவுரை சொல்வதும் அவர்களது கடமையாகிவிட்டன. மக்களின் பிரதிநிதிகள் இவர்களாவர்.

–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

### அழுத்தங்களைத் தாண்டிய அரசின் செயற்பாடுகள்

# ஜீ.எஸ்.பி வரிச்சலுகை

**லக்ஸ்மன்**

சர்வதேச அழுத்தங்கள் ஒரு பொருட்டேயல்ல என்பதுபோல்> இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன.

இதற்குச் சிறப்பானதொரு எடுத்துக்காட்டு ஜீ.எஸ்.பி. வரிச்சலுகை நிறுத்தப்பட்டால் அதனை எதிர்கொள்ளத் தயாராகவே இருக்கிறோம் என தற்போதைய மத்திய வங்கியின் ஆளுனராக இருக்கின்ற அஜித் நிவாட் கப்ரால் முன்னர் இராஜாங்க அமைச்சராக இருந்த வேளை வெளியிட்ட கருத்தாகும்.

ஜீ.எஸ்.பி. வரிச்சலுகை நிறுத்தப்பட்டால், அதற்கு அரசாங்கம் என்றவகையில் நாங்கள் முகம்கொடுப்போம். ஏனெனில் ஜீ.எஸ்.பி. வரிச்சலுகை மூலம் நாட்டுக்கு கிடைப்பது நூற்றுக்கு 3வீதமான நிவாரணமாகும். என்றாலும் ஜீ.எஸ்.பி. வரிச்சலுகையை தொடர்ந்து பெற்றுக்கொள்வதற்காக வெளிவிவகாரத்துறை கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகிறது. கடந்த அரசாங்கம் ஜீ.எஸ்.பி. வரிச்சலுகையை பெற்றுக்கொண்டது, அந்த நாடுகளின் பல்வேறு நிபந்தனைகளுக்கு கீழ்ப்படிந்தாகும். வெளிநாடுகளின் நிபந்தனைகளுக்கு கீழ்ப்படிவதற்கு ஆளும் அரசாங்கத்துக்கு மக்களின் ஆணை கிடைக்கவில்லை. நாட்டின் சுயாதீனத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்த நிபந்தனைகளுக்கும் இந்த அரசாங்கம் கீழ்ப்படியப்போவதில்லை என்று தெரிவித்திருந்தார்.

இலங்கைக்கு ஜீ.எஸ்.பி. வரிச்சலுகையை தொடர்ந்து வழங்குவது குறித்து மீள பரிசீலனை செய்யுமாறு ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தில் பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டிருந்தது. நாட்டுக்கு கிடைக்கப்பெற்றுவரும் ஜீ.எஸ்.பி. வரிச்சலு நிறுத்தப்படுவதானது நாட்டில் பெரும் பொருளாதார நெருக்கடியைத் தோற்றுவிக்கும். ஏற்கனவே மக்கள் எதிர் நோக்கிக்கொண்டிருக்கும் வாழ்வாதாரம் சார்ந்த சிக்கல்கள் பெரும் பிரச்சினையாகவே மாற்றம் பெறும் என்பது பொருளாதாரத்துறை சார்ந்த பலருடைய கருத்தாக இருக்கிறது. ஆனால் இலங்கை அதனை ஒரு பொருட்டாகவே கொள்ளாதிருப்பது கவனத்திலெடுக்கப்பட வேண்டியதாகும்.

தற்போதைய நிலையில் ஜீ.எஸ். பி. வரிச்சலுகையை வழங்குவது குறித்த தீர்மானங்களை எடுப்பதற்கும் ஆராய்வதற்குமான குழு கடந்த 27ஆம்திகதி நாட்டுக்கு வந்திருக்கிறது. ஆராய்ந்து வருகிறது; அதற்காகச் சந்திப்புக்களையும் நிகழ்த்துகிறது.

ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவையும் ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகைத் திட்டம் புதுப்பிக்கப்படும் என்பதுடன், வரிச் சலுகை நீடிப்பு குறித்து கண்காணிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்வது வழமையாகும். எனினும், ஐரோப்பிய ஒன்றியத்தில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னணியில் இந்தப் பிரதிநிதிகள் குழு இலங்கைக்கு விஜயம் செய்திருக்கிறது. குறித்த குழு இலங்கையின் நிலைமைகளை நேரில் ஆய்வு செய்து ஜி.எஸ். பி.பிளஸ் வரிச்சலுகையை வழங்குவதா இல்லையா என அறிக்கையொன்றை தயாரித்து ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளது.

ஒவ்வொரு தடவையிலும் ஐரோப்பிய ஒன்றியத்தால் இலங்கைக்கு வழங்கப்படும் ஏற்றுமதி வரிச் சலுகையான ஜி.எஸ்.பி பிளஸ் நிறுத்தப்படும் என்ற அச்சத்துடனேயே அரசாங்கங்கள் தமது ஆட்சிகளைத் தொடரவேண்டிய நிலை ஏற்பட்டு வருகிறது. நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் இவ் வரிச்சலுகையானது சிறப்பாக கையாளப்பட்டிருந்தது. ஆனால் இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளால் மீண்டும் இன் நெடுக்கடி நிலை ஏற்பட்டிருக்கிறது.

வணிகச் சூழ்நிலையையும் நம்பகத்தன்மையையும் மேம்படுத்தல், பொருளாதார அடிப்படைகளை ஸ்திரப்படுத்தல், சர்வதேச முதலீட்டையும், கடன் சந்தையையும் கவர்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல், நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தல் மக்களின் மனித உரிமைகள் மீறப்படுதலைத் தவிர்த்தல் என பல்வேறு விடயப்பரப்புகள் தேவையான நிலையில் இலங்கை வெறுமனே நிதி, வர்த்தக ரீதியாக மாத்திரம் இதனை அணுக முயல்வதானது காத்திரமானதொன்றல்ல. ஆனால், மக்களின் எதிர்பார்ப்புகளை ஒட்டியதாக அமைந்திருக்கின்ற ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தின் பிரேரணையானது இந்த முறை இலங்கைக்குப் பாதிப்பையே ஏற்படுத்தும் என்ற நிலையே காணப்படுகிறது.

இலங்கை அரசாங்கமானது 2017ஆம் ஆண்டு இலங்கையில் பயங்கரவாத தடுப்புச் சட்டம் நீக்கப்படும் என்று வாக்குறுதி அளித்திருந்தது. இருந்தாலும் அது நிறைவேற்றப்படவில்லை. அதன் பின்னர் கடந்த ஜுன் மாத நடுப்பகுதியில் ஐரோப்பிய ஒன்றியத்தின் பாராமன்றத்தில் இலங்கையில் பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்றும் மனித உரிமைகள் தொடர்பான விடயத்தில் காணப்படும் நிலைமைகள் தொடர்கவும் குறிப்பிடப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதையடுத்து ஜனாதிபதியோ, பிரதமரோ, நீதியமைச்சரோ பயங்கரவாதத் தடைச்சட்டத்தினைத் திருத்துதல் தொடர்பில் கருத்துத் தெரிவிக்காமல் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அவசர அவசரமாக நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்திருந்தார். ஆனால் இதுவரையில் எதுவும் நடைபெற்றதாக இல்லை.

இந்நிலையில்தான் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கிவிட்டு ஜீ.எஸ்.பி. வரிச்சலுகை பாதுகாத்துக்கொள்ளவேண்டும் என்ற வகையிலான கருத்துக்கள் வெளிவந்தவண்ணமிருக்கின்றன. இலங்கை நாட்டின் ஏற்றுமதி, இறக்குமதி என்னும் இரண்டும் பொருளாதாரத்தில் முக்கிய அம்சமாகும். ஆனால் இறக்குமதியைக் குறைத்து ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது. இது ஒரு திறந்த பொருளாதாரக் கொள்கையுள்ள நாட்டுக்குப் பொருத்தமா என்று கேள்விகள் எழுகின்றன. இறக்குமதி அதிகரித்தால் அது நாட்டின் பொருளாதாரத்தில் பாதிப்பு ஏற்படும் என்ற எண்ணத்தில் இறக்குமதிக்கான கட்டுப்பாடுகளை இலங்கை விதித்து வருகிறது. இந்தக் கட்டுப்பாடுகள் சரியான முறையில் திட்டமிட்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டால் ஏன் பிரதமர் நிவாரணத் திட்டங்களை அறிமுகம் செய்கிறார் என்பதே கேள்வி.

இரசாயன உரத்துக்குத் தடை, வாகனங்கள் இறக்குமதிக்குத் தடை, அத்தியாவசியமற்ற பொருட்கள் என்று ஒரு பட்டியல் வெளியிடப்படுகிறது. ஆனால் அவற்றில் பல அத்தியாவசியமானவை என்று வாதங்கள் நடைபெறுகின்றன. அரசாங்கம் சில பொருட்களுக்கு இறக்குமதிக்கான தடையை ஏற்படுத்தி ஒருசிலருக்கு அதற்கான அனுமதியை வழங்கி, அவர்கள் லாபம் ஈட்டும்வகையில் நடவடிக்கை எடுத்திருக்கின்றது. அரசாங்கம் சில வர்த்தக பொருட்கள் இறக்குமதி செய்வதை தடைசெய்திருக்கின்றது. இது வெளிநாடுகளுடன் பகையை ஏற்படுத்தாமல் பாதுகாத்துக்கொள்ளவேண்டும். வர்த்தகம் என்பது ஒருவழி பாதை அல்ல என்றெல்லாம் விமர்சனங்கள் வந்த வண்ணமிருக்கின்றன.

இந்த நிலையில்தான் மக்களும் தங்களுடைய எதிர்பார்ப்புகளை வெளிப்படுத்தத் தொடங்கியிருக்கின்றனர். முக்கியமாக வடக்கு கிழக்கு பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் வடக்கிலும் கிழக்கிலும் ஊடக சந்திப்புக்களை நடத்தியிருக்கின்றன. மக்களுடைய எதிர்பார்ப்புகளின் நிறைவேற்றமானது இலங்கை அரசாங்கத்திற்கு மிக முக்கியமானதொன்றல்ல என்றாலும் அது தாக்கம் செலுத்தும் என்பதில் ஐயமில்லை.

இலங்கையில் சிறுபான்மை மக்களுக்கெதிரான வரலாறு சுருக்கமாகப் பார்ப்பதற்கே மிகக் கொடூரமானது. முதலில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை அமர்வு தொடங்குவதற்கு முதல்நாள் அதற்கு லொஹான் ரத்தத்த அநுராதபுர சிறைச்சாலையில் நடந்து கொண்ட முறைமை சொல்லப்படலாம். அதே போன்று ஐக்கிய நாடுகளின் கூட்டத்தொடருக்கு முன்னம் கைக்குண்டுகள் கிளைமோர் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு கைதுகள் நடைபெறுகின்றன. ஐரோப்பிய நாடாளுமன்றக் குழு வருகைக்குள் வைத்தியசாலையில் கைக்குண்டுகள் மீட்கப்பட்டன. புலர் கைது செய்யப்பட்டார்கள். புனர்வாழ்வுபெற்ற முன்னாள் போராளி கைதாகிறார். இது சரியாக கடந்த கால வெள்ளை வான் கலாச்சாரத்தினை உலகுக்கே நினைபடுத்தியிருக்கிறது. இது ஒன்றே ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கும் ஜீ.எஸ். பி நிறுத்தப்படுவதற்கும் சாட்சியாகும்.

அந்த வகையில்தான், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழான திடீர் கைதுககள் நிறுத்தப்படவேண்டும். அச்சட்டம் இல்லாமலாக்கப்படவேண்டும், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி, கையகப்படுத்தப்படும் எமது காணிகளுக்குரிய தீர்வு, மக்களின் வாழ்வாதார பிரச்சினைகள் தொடர்பில் சரியான தீரவுகள் முன்வைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகள் வலுக்கின்றன.

ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையானது ஒரு சிறிய தொகை என்றாலும் கூட இலங்கையின் ஏற்றுமதித்துறை அந்தச் சவாலை எதிர்கொள்ளவே நேரிடும். அந்த வகையில் அதனை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் வகையில் தம்மை பலப்படுத்திக் கொள்ளும் முயற்சிகள் தேவையானதுதான். அந்த ஒழுங்கில் வரிச் சலுகை கிடைக்கும் என்று நம்புவோம்.

## கடிதங்கள்

### கல்முனை மாநகர சபை பிரதேசங்களில்

# கட்டாக்காலிகளால் தொல்லை

கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில், காட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம், இரவு நேரங்களில் மட்டுமின்றி பகல் வேளைகளிலும் உள்ளதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

வீதிகளில் இவ்வாறு கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகளால், பாதசாரிகள், வாகன சாரதிகளுக்கு இடைஞ்சல் ஏற்பட்டு, போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருவதுடன் விபத்துச் சம்பவங்களும் இடம்பெறும் அபாயம் நிலவிவருகிறது. இந்த நிலைமை குறித்து, கட்டாக்காலி மாடுகளின் உரிமையாளர்கள், சமூக அக்கறையுடன் செயற்பட்டு, வீதிகளில் போக்குவரத்து நெரிசல், விபத்துச் சம்பவங்கள் நிகழாதவாறு செயற்படவேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இது தொடர்பில் கல்முனை மாநகர சபை மேயர், மாநகர சபை ஆணையாளர், மாநகர சபை உறுப்பினர்கள், கவனம் செலுத்தி கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டத்தைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கையை எடுத்து, நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தருமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

– நூருள் ஹுதா உமர்





### திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவமும் இரசாயனப் பாவனைத் தவிர்ப்பும்

# நஞ்சுண்ட நோயாளிகள்

ஏ.எச்.ஏ. ஹுஸைன்

இலங்கையில் திண்மக் கழிவு முகாமைத்துவம் என்பது மிகப்பெரிய சவால் நிறைந்த ஒரு பிரச்சினையாக உருவெடுத்து வந்துள்ளது.

கழிவுகளைச் சேகரிக்கும் முறையற்ற வழிமுறைகள்> முறைகேடான கழிவகற்றும் முறைமைகள் திண்மக் கழிவகற்றல் நடவடிக்கைகளில் சிக்கல்களை ஏற்படுத்துகின்றன.

தற்போது நடைமுறையிலுள்ள கழிவகற்றும் முறைமைகள் சுற்றாடல் சூழல் சம்பந்தப்பட்ட பல பிரச்சினைகளை உருவாக்கியுள்ளதோடு மக்கள் மத்தியில் அதிருப்தியையும் தோற்றுவித்துள்ளது.

இதனால் சம காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒட்டு மொத்தமானவர்களும் எதிர்கால சந்ததியும் பாதிக்கப்பட்டுள்ளதோடு தற்போது நடைமுறையிலுள்ள முறைமையற்ற கழிவகற்றும் முறைமைகள் சுகாதார சமூக பொருளாதார கலாசாரப் பிரச்சினைகளுக்கும் வழி வகுத்துள்ளது.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் கழிவுகள் சேகரிப்பு, கழிவுகளை ஒதுக்கும் நடவடிக்கைகளை நோட்டமிடுமிடத்து, அதற்கான உட்கட்டமைப்புகளும் வளங்களும் மிகக் குறைவாக அன்றேல் ஒன்றுமே இல்லாத நிலைமைதான் காணப்படுகிறது.

கண்ட கண்ட இடங்களிலெல்லாம் கட்டுப்பாடற்ற விதத்தில் குப்பைகளை வீசுவதும் புதைப்பதும் நாட்டில் சூழல் சம்பந்தமான உணர்வலைகளை உசுப்பி விடுவதற்குக் காரணமாய் அமைந்து விடுகின்றன.

வீடுகளிலும் உற்பத்தித் தொழிற்றுறை இடங்களிலும் இருந்து கடைசியாக ஒதுக்கப்படும் கழிவுகளை, அப்புறப்படுத்துவதற்கான ஒழுங்கான முறைமைகள் இல்லை.

ஒழுங்கற்ற முறையில் வீசப்படும் கழிவுகளால், வடிகான்கள் தடைப்படுத்தப்படுவதோடு ஆபத்து விளைவிக்கக்கூடிய நோய்களைப் பரப்பும் நுளம்புகள், எலிகள் போன்றவை உருவாகுவதற்கும் தோதாய் அமைந்து விடுகின்றன.

இயற்கைச் சூழலில் அமைந்த திறந்த வெளிகளில் கழிவுகளைக் கொட்டுதல் நிலம், நீர் முகங்கள் மாசடைவதற்கு வழி வகுத்து விடுகிறது. திறந்த வெளிகளில் கழிவுகளை எரியூட்டுதலும் பாரதூரமான சுகாதாரச் சீர்கேடுகளுக்கு வித்திடுகிறது.

இலங்கையில் திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவத்தைக் கையாளும் முழுப் பொறுப்பும் சட்டப்படி உள்ளூராட்சி நிர்வாகத்தையே சார்ந்ததாகும். மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை என்பவற்றின் சட்டப்பிரமாணங்களுக்கமைய அந்தந்த உள்ளூராட்சி நிர்வாகம் கூடுதல் கவனமெடுத்து இயங்க வேண்டிய கடப்பாடு உள்ளது.

திண்மக் கழிவுகளை முகாமைத்துவம் செய்வதில் இலங்கையின் பெரும்பாலான பகுதிகளிலுள்ள உள்ளூராட்சி நிரர்வாகம் ஒப்பீட்டளவில் மிகக்குறைந்தளவு அக்கறையே எடுத்திருப்பதால், கடந்த காலங்களில் பொதுமக்கள் ஒரு போராட்டமான நிலைமையையே எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

இந்த நிலைமைகளைச் சீர்செய்து, இந்தப் பிரச்சினைக்கு சரியான தீர்வைப்பெற்றுக் கொள்ள வேண்டும். வளங்களை ஆகக் கூடிய மட்டத்தில் மீள்பாவனைக்கு உட்படுத்துதல், வீண் விரயத்தைத் தவிர்த்தல், பாவிக்க முடியாத எச்ச சொச்சங்களை இயற்கைக்கு முரணாகாத விதத்தில் அழித்தல் வேண்டும்.

இதற்கு அமைவாக, 2007ஆம் ஆண்டு அமைச்சரவையின் அங்கிகாரம் பெற்ற 'பிலிசரு' எனப்படுகின்ற புதிய திட்டமொன்றை அப்போதைய அரசாங்கம் அமல்படுத்தியது. 'பிலிசரு' எனப்படுகின்ற சிங்களச் சொல்லுக்கு 'மீள்-வளம்' எனப் பொருள்படும்.

> **அறிக்கைகளின்படி, நாட்டில் ஆகக் கூடுதலான திண்மக் கழிவுகளை வெளிக்கொண்டுவரும் முதலாவது இடமாக கொழும்பு மாநகரம் காணப்படுகிறது**

தேசிய கழிவகற்றல் கொள்கைகளை வகுத்தல், கழிவகற்றல் முகாமைத்துவத்தில் ஈடுபட்டுள்ள சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு விழிப்புணர்வையூட்டி அவர்களது இயலுமையைக் கட்டியெழுப்புதல், உள்ளூராட்சி நிர்வாகத்தினருக்கு தற்போது நடைமுறையிலுள்ள முறைமைகளில் முன்னேற்றத்தையும் புதிய அணுகுமுறைகளையும் மேற்கொள்வதற்காக தொழில்நுட்ப உதவிகளையும் வளங்களையும் வழங்குதல், கழிவகற்றல் முகாமைத்துவத் திட்டத்தில் சமூக அணிதிரட்டலுக்கூடாகவும் மிகவும் சாதகமான முறையில் வளங்களைப் பாவிப்பதற்கான இலகு படுத்தல்களை வழங்குதல், கழிவகற்றல் திட்டத்தைக் கண்காணித்தல், கேட்டுக் கொண்டபடி செய்யாத பங்காளர்களுக்கெதிராக நீண்ட கால வழிமுறையில் சட்ட நடவடிக்கை எடுப்பது சம்பந்தமான விளக்கத்தை அளித்தல் என்பவை உள்ளடங்கியதாக 'மீள்வளம்' நிகழ்ச்சித் திட்டம் 2008 ஜனவரியிலிருந்து அடுத்து வந்த மூன்று வருட காலத்திற்கு 5.675 பில்லியன் ரூபாய் ஒதுக்கீட்டில் அமல்படுத்தப்பட்டது.

எதிர்கால சந்ததிகள் ஆகக் கூடிய மட்டத்தில் வளங்களை மீளவும் பாவித்தல், பாவித்த வளங்களை மீள்சுழற்சிக்கு உட்படுத்துதல், புதிய வளங்களைக் கண்டுபிடித்தல் என்பனவற்றில் மிகப் பொருத்தமானதும் கழிவுகளை அகற்றுவதில் சூழலுக்குப் பங்கம் ஏற்படாததுமான வழிவகைகளை உருவாக்குதல் மூலம் 'மீள்வளம்' நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான இலக்காக இருந்ததோடு, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் திண்மக் கழிவுப் பிரச்சினைகளைத் தீர்ப்பது என்றும் இலக்கு நிரணயிக்கப்பட்டது.

ஆனால் காலம் கடந்ததைத் தவிர, ஆன பலன் எதுவுமே கிடைக்கவில்லை.

அறிக்கைகளின்படி, நாட்டில் ஆகக் கூடுதலான திண்மக் கழிவுகளை வெளிக்கொண்டுவரும் முதலாவது இடமாக கொழும்பு மாநகரம் காணப்படுகிறது.

அதற்கடுத்ததாக, வடக்கு கிழக்கு மாகாணங்கள் இடம்பிடித்திருக்கின்றன.



நமது கழிவுகளைக் கொண்டு, ஆண்டுக்குச் சராசரியாக 100,000 தொன் சேதனப் பசளையை உற்பத்தி செய்யக்கூடிய கொள்ளளவு நம்மிடம் உள்ளது. இது நமது விவசாயிகள் இப்பொழுது கையாளும் உரப்பாவினையில் மூன்றில் ஒரு பகுதியை ஈடு செய்யப் போதுமானது.

தற்போது முறையற்ற விதத்தில் அப்புறப்படுத்தப்படும் இந்தக் கழிவுகளைக் கொண்டு, இவ்வளவு தொகை சேதன வளமாக்கிகளை நாம் உற்பத்தி செய்வோமானால் ஒரு புறம் நமது மண் வளத்தைப் பாதுகாப்பதோடு மறுபுறத்தில் இயற்கைச் சமநிலையைப் பேணிக் கொள்ளவும் பாதுகாப்பான வழி முறையேற்படும்.

இன்னொரு புறத்தில் உரத்தை வாங்குவதற்காக வெளிநாடுகளுக்கு அனுப்பும் 1.6 பில்லியன் ரூபாய் பெருந்தொகைப் பணத்தையும் மீதப்படுத்திக் கொள்ள முடியும். இன்னொரு வகையில், இரசாயனங்களால் நமது மண்வளம் நஞ்சூட்டப் படுவதையும் உறுதியாகத் தடுத்துக் கொள்ள முடியும்.

இரசாயனப் பாவனை என்பது நிலம், நீர், காற்று என்பனவற்றையும் நாம் உண்ணும் உணவையும் சிறுகச் சிறுக நஞ்சூட்டப்பட்டதாக மாற்றுவதற்கே வழிசெய்கிறது.

நாம் உண்ணும் உணவு, காய் கறிகள், பழவகைகள், தானியங்கள் குளங்கள் வயல்களிலுள்ள நன்நீர் மீன்கள், இறைச்சிக் கோழி என்பவை இப்பொழுது சிறிதளவேனும் இரசாயனங்கள் கலக்காததாக இல்லை.

இவற்றை உண்பதன் மூலம், நமது உடல் இயல்புக்கு மாறான மாற்றங்களுக்குள்ளாகி பலவீனப்பட்டுப் போகிறது. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக, இப்பொழுது பெண் பிள்ளைகள் மிகச் சிறிய வயதில் பருவமடைந்து வருவதைக் குறிப்பிடலாம்.

நமது விவசாயிகள் அமோக விளைச்சலைப் பெறும் பேராசை காரணமாகவும் வளங்களைச் சுரண்டும் மேற்கு வல்லாதிக்க சக்திகள், ஐரோப்பிய நாடுகளின் நயவஞ்சகத்தின்பால் கவரப்பட்டு இயற்கையோடு இணைந்த விவசாயத்தைக் கைவிட்டதால், இன்று நாமும் நமது எதிர்கால சந்ததியும் நஞ்சுண்ட நோயாளிகளாக வாழ வேண்டியுள்ளது.

இரசாயனங்கள் பூச்சிக் கொல்லிகள், களைநாசினிகள் கிருமி நாசினிகளைப் பாவிப்பதன்முலம் குறுகிய காலத்தில் அதிகமான விளைச்சலையும் அதன் மூலமாக கூடுதல் வருமானத்தையும் பெறமுடியும் என விவசாயிகள் நம்ப வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

உண்மை நிலைமை அதுவல்ல; உண்மையில் இத்தகைய இரசாயனப் பாவனை என்பது ஒப்பீட்டளவில், எமது பாரம்பரிய விவசாயத்தின் மூலம் கிடைத்த பலாபலன்களைக் குறைத்திருக்கவே செய்துள்ளது.

ஒட்டுமொத்தத்தில் பார்த்தால், இரசாயன மற்றும் அசேதனப் பசளைப் பாவனையின் மூலம், நமது நாட்டின் மண்வளம் நாசம் செய்யப்பட்டிருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

இதனுடன் இணைந்ததாக ஒட்டுமொத்த சூழல் மாசுபடுவதற்கும் காரணங்களாய் அமைந்து, உபாதைகளையும் ஆரோக்கியமற்ற உடல் உள நிலைமையையும் ஏற்படுத்தியுள்ளது.

இத்தகையதொரு சாபக்கேடான நிலைமைகளிலிருந்து மீள்வதற்கு எல்லாத்தரப்பினரும் தங்களாலான எல்லா நடவடிக்கைகளையும் இப்பொழுதிருந்தே எடுத்தாக வேண்டும். திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவம் அதற்கு ஒரு திறவு கோலாகவும் தொடக்க புள்ளியாகவும் இருக்கட்டும்.

---

### நாவலப்பிட்டி சூழ்ந்த மலை முகடுகளில் ரீங்காரமிடும்

# அமரர் தர்மசீலன் நினைவுகள்

இரா. யோகேசன்
(கினிகத்தேனை நிருபர்)

**சமூக, கலை இலக்கியத்தின் ஆளுமையாகத் திகழ்ந்த அமரர் தர்மமாவின் இழப்பு இடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் என நிகர் சமூக கலை இலக்கிய அரங்கத்தின் அமைப்பாளர் அ.லெட்சுமணனால் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது; சிறுவர் பராயம் தொடக்கம், சமூக கலை இலக்கிய விளையாட்டுத்துறை ஊசலாட்டத்துடன் வாழ்ந்த அமரர் தர்மா என அழைக்கப்படும் சுப்பரமணியம் தர்மசீலன், தனது 69 ஆவது வயதில் தனது முச்சை நிறுத்திக்கொண்டார். 01.06.0952 சுப்பிரமணியம் சிவாபக்கியம் தம்பதியினரின் மூத்த புதல்வராக பிறந்த இவருக்கு இரு சகோதரர்களும் இரு சகோதரிகளும் என அனைவருடன் வாழ்ந்து வந்தார். பெற்றோர்களுடன் இணைந்து தனது சகோதரர்களை பராமரிப்பது தொடர்பிலும் முத்தவனாக தனது பொறுப்பினை ஆற்றியவராக திகழ்கின்றார்.

அமரர் தர்மா என்ற சொல் நாவலபிட்டியின் மலை முகடுகளிலெல்லாம் ரீங்காரம் செய்த சொல்லாக திகழ்கின்றது. அண்ணாரின் இழப்பு செய்தியறிந்து நாவலபிட்டி பிரதேசம் மிகுந்த சோகத்திற்கு உள்ளாகியுள்ளது. நோய்வாய்ப்பட்டு நிலையில் 29.9.2021 நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலே எம்மைவிட்டு பிரிந்துள்ளார்.

அறுபதிகளில் தனது பாடசாலை காலத்தில் இலக்கிய முயற்சிகளிலும் விளையாட்டுதுறையிலும் மிகுந்த ஈடுபாடுகொண்டவர். சிறுவயது முதலே ஓவியத்தில் அதீத ஈடுபாடு கொண்ட அன்னார் பல பிரபல எழுத்தாளர்களின் அட்டைப்படத்தை இவராலே வரையப்பட்டுள்ளது. இதன் கையெழுத்து தொடர்பாகவும் அமரர் தர்மாவின் தொடர்பிலும் மேமன் கவி சிலாகித்து கூறுவார்.

அறுபதுகளின் பிற்பகுதியில் நாவலபிட்டியிலிருந்து வெளிவந்த 'மலைக்குருவி' சஞ்சிகையில் இணை ஆசிரியர்களில் ஒருவராகவும் திகழ்ந்து மலையக இதழியல் துறையில் தடம் பதித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. கையெழுத்து பிரதியாக வெளிவந்த இதழின் பல பக்கங்களில் இவரின் எழுத்துக்களே ஆதிக்கம் செலுத்தியுள்ளன. சாகும் வரையில் அவரின் எழுத்தின் நளினம் குறைவடையாமலே இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இவருடன் இணைந்து மலைதாசன், மலைக்குருவியை தந்தவர்களில் கணேசதாசன், பத்மகுமார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவார். கதிரேசன் கல்லூரியின் 'நற்றமிழ் அருவி' இதழில் தர்மசீலன் பங்கு அளப்பரியதாகும்.

சிறந்த வாசகராகவும் வாசிப்பராகவும் திழ்ந்தமை இவரின் சிறப்பம்சமாகும். இலங்கையின் மூத்த படைப்பு ஆளுமைகளான டானியல், டொமினிக்ஜீவா, நந்தி, பிரேம்ஜி, சோமகாந்தன் ஆகியோருடன் மிக நெருங்கத்துடன் நட்பைப் பேணியதுடன் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் நாவலபிட்டி கிளையின் மிக முக்கிய செயற்பாட்டாளராக திகழ்ந்தார். நாவலபிட்டி இளம் எழுத்தாளர் சங்கத்தில் இவரது பங்குபற்றல் குறிப்பிடத்தக்கதாகும்.

> **சிறந்த வாசகராகவும் வாசிப்பராகவும் திழ்ந்தமை இவரின் சிறப்பம்சமாகும். இலங்கையின் மூத்த படைப்பு ஆளுமைகளான டானியல், டொமினிக்ஜீவா, நந்தி, பிரேம்ஜி, சோமகாந்தன் ஆகியோருடன் மிக நெருங்கத்துடன் நட்பைப் பேணியதுடன் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் நாவலபிட்டி கிளையின் மிக முக்கிய செயற்பாட்டாளராக திகழ்ந்தார்**

'மல்லிகை' இதழோடு மிக ஆர்வத்துக்குரிய வாசகராகவும் திகழ்ந்திருக்கின்றார்.

எழுத்தாளர் சடகோபனின் பால்ய நண்பனாகவும் வகுப்புத் தோழனாகவும் திகழ்ந்த தர்மசீலன், அவரது இலக்கிய செயற்பாடுகளோடும் மிக நெருக்கமாக தொடர்பை பேணியவராவார். நாவலிபிட்டியின் கலை இலக்கிய செயற்பாடுகளில் இவரின் நட்பின் ஆழம் பற்றிய சடகோபன் எப்போதும் சிலாகித்து பேசியது குறிப்பிடத்தக்கது.

எழுபதுகளில் இலங்கை ஒலிபரப்பு கூட்டுதான நிகழ்ச்சிகளான 'ஒலிமஞ்சரி', 'வாலிப மஞ்சரி', 'மங்கையர் மஞ்சரி' போன்ற நிகழ்ச்சிகளில் ஈடுபாடு கொண்டவராகவும் நிகழ்வுகளில் பங்குபற்றுபவராகவும் திகழ்ந்தமையும் குறிப்பிடத்தக்கது. சிறுகதை, கவிதை என இந்நிகழ்ச்சியில் தர்மசீலன் என்ற நாமம் மிகப் பிரபல்யம் பெற்று விளங்கியது.

சிறுகதை செயற்பாட்டாளராக திகழ்ந்து, 1971ஆம் ஆண்டு லண்டனில் இருந்து வெளிவந்த 'லண்டன் முரசு' இதழ் நடத்திய சிறுகதைப் போட்டியில் முதல் பரிசைப்பெற்று, 'மகிழ்வேந்தன்' சின்னத்துடன் தங்கப்பதக்கத்தையும் பெற்றார்.



அண்மையில் இவரது கவிதையொன்றும் சர்வதேச இதழிலொன்றில் பிரசுரித்தி ருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இவரது கலை இலக்கிய செயற்பாடுகளை ஆதரித்த ஒரு வாசகியாக தி.சர்மிளா திகழ்ந்தார். சர்மிளா என்ற வாசகியை காதலித்து 1992ஆம் ஆண்டு இவரை கரம் பிடித்தார். மிகப் புரிந்துணர்வான காதல் வாழ்க்கையை இவர் இறக்கும் வரை வாழ்ந்தார். தர்மசீலன் - சர்மிளா தம்பதிகளின் புதல்வனாக ஆதர்சன், அம்சத்வன், அபினவன் ஆகியோர் திகழ்கின்றார்கள்.

> **இவரது கலை இலக்கிய செயற்பாடுகளை ஆதரித்த ஒரு வாசகியாக தி.சர்மிளா திகழ்ந்தார். சர்மிளா என்ற வாசகியை காதலித்து 1992ஆம் ஆண்டு இவரை கரம் பிடித்தார். மிகப் புரிந்துணர்வான காதல் வாழ்க்கையை இவர் இறக்கும் வரை வாழ்ந்தார். தர்மசீலன் - சர்மிளா தம்பதிகளின் புதல்வனாக ஆதர்சன், அம்சத்வன், அபினவன் ஆகியோர் திகழ்கின்றார்கள்**

தர்மசீலனைப் போன்றே நல்லதொரு வாசகியான திருமதி சர்மிளா தர்மசீலன், 2010ஆம் ஆண்டு, நாவலப்பிட்டி தமிழ்ச் சங்கத்தை ஆரம்பித்த போது, ஸ்தாபக உறுப்பினர்களின் ஒருவராகவும் திகழ்ந்தார். நாவலபிட்டி தமிழ்ச் சங்க செயற்பாடுகளில் எனக்கு முக்கிய ஆலோசனைகளை வழங்குவதில் இவரது ஆர்வம் குறிப்பிடத்தக்கது.

இது போன்று, நாவலப்பிட்டி இந்து மன்றம், ஆத்மஜோதி நல ஒன்றியம் போன்ற அமைப்பு சார்த்த செயற்பாட்டாளர் என்பதும் மிக நெருங்கிய தொடர்புகளை பேணி வந்தார்.

நாவலபிட்டி பிரதேசத்தின் மூவின மக்களின் நேசத்தோடு நெருங்கிய உறவையும் பேணி வந்த இவர், அமரர் இரா. சிவலிங்கம் அவர்களின் ஞாபகார்த்த நிகழ்வு நாவலபிட்டியில் இடம்பெற்ற போது, மிகவும் காத்திரமான வகையில் நிகழ்வை ஒழுங்கு செய்தமையும் பற்றி இரா. சிவலிங்கம் ஞாபகார்த்த குழுவின் செயற்பாட்டாளாரான எம். வாமதேவன், பேராசிரியர் தை.தனராஜ் ஆகியோர் விதந்து கூறினார்கள்.

நாவலபிட்டி கதிரேசன் மத்திய கல்லூரியின் பழைய மாணவரான எஸ்.தர்மசீலன், கதிரேசன் என்ற மூல நாமத்தின் கூறுகளை கதிரேசன் மத்திய கல்லூரி, கதிரேசன் கனிஷ்ட வித்தியாலயம், கதிரேசன் ஆரம்ப பாடசாலை ஆகிய பாடசாலைகளின் அபிவிருத்தி சங்கங்களில் அங்கம் வகித்துள்ளார். ஒரு தசாப்த காலமாகப் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் செயலாளராக கடமையாற்றிய பங்களிப்பு குறித்து, கதிரேசன் மத்திய கல்லூரி அதிபர் டி.நாகராஜ் விதந்து கூறுவார்.

இவ்வாறே கதிரேசன் கல்லூரியில் கடமையாற்றிய அதிபர்களின் புகைப்படங்களை ஆவணப்படுத்தும் பணியில் இவரது பங்கு பற்றல் மிக முக்கியமானதாகும். பாடசாலை பௌதிக வளங்களை சீரமைப்பதிலும் கல்லூரியின் வளர்ச்சியிலும் இவரது முன்மாதிரி, காலத்தால் போற்ற வேண்டியதாகும். இவ்வாறே, கதிரேசன் பழைய மாணவர் சங்க செயற்பாடுகளிலும் இவரது பங்களிப்பு சிறப்புக்குரியதாகும்.

அமரர் தர்மசீலன் அவர்களது முன்மாதிரி, நாவலபிட்டி சூழ்ந்த மலை முகடுகளில் தொடர்ந்து ரீங்காரமிட்டுக்கொண்டிருக்கும். முன்மாதிரியாக வாழ்ந்து அனைவரையும் சோகத்தில் ஆழ்த்திய அமரர் எஸ். தர்மசீலன் அவர்களது இழப்பு ஈடுசெய்ய முடியாதது என்பதோடு, எமது நிகர் சமூக கலை இலக்கிய அரங்கம் சார்பாக ஆழ்ந்த அஞ்சலிகள்.

# ஒன்றுபட்டு மேலெழுவோம்


## கொரோனாவின் பிடியிலிருந்து சுற்றுலாத்துறை மீளவேண்டும்



நடராஜன் ஹரன்







இலங்கையை கொரோனா வைரஸின் பிடியில் சிக்கவைத்த முதலாவது செய்தி 2020 மார்ச் 11ஆம் திகதி, சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அனில் ஜாசிங்க தெரிவித்ததாக, ஜனாதிபதி ஊடகப் பிரிவு விசேட அறிக்கை ஊடாக வெளிப்படுத்தி இருந்தது. 'அடையாளம் காணப்பட்ட கொரோனா வைரஸ் தொற்றாளி, அங்கொடை ஐ.டி.எச் இல் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் 52 வயதான இவர், சுற்றுலா வழிக்காட்டி எனவும் இத்தாலியிலிருந்து இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளுக்கு வழிகாட்டியாகச் செயற்பட்டவருக்கே தொற்று உறுதிப்படுத்தப்பட்டது' என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

சுற்றுலா வாயிலாக, உலகத்தின் தரிசனங்களை நேரில் பார்த்து, கற்றுக் கொள்ள முடிகிறது.

புதியபுதிய இடங்களைக் காண்பதால், மனதில் புத்துணர்ச்சி ஏற்படுகிறது. மலைகள், நீர்வீழ்ச்சி, தீவுகள், உலக அதிசயங்கள், கட்டடங்கள், கேளிக்கை பூங்காக்கள், கடற்கரை என உலகில் பல்வேறு வகையான சுற்றுலா இடங்கள் உள்ளன.

ஆனால், இவற்றை எல்லாம் கட்டிப்போட்டு, தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது கொரோனா வைரஸ். உலகளாவிய ரீதியில், கொவிட்-19 மிகவும் தாக்கம் செலுத்திய துறை சுற்றுலாத்துறை ஆகும்.

கல்விச் சுற்றுலா, இன்பச் சுற்றுலா, வியாபார சுற்றுலா, சுற்றுச்சூழல் சுற்றுலா, பாரம்பரிய சுற்றுலா, கலாசார சுற்றுலா எனப் பல வகைகள் சுற்றுலாவில் உள்ளன. ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு பெருமை, அடையாளம், தனித்தன்மை போன்றன உள்ளன.

உலகம் முழுவதும் இன்றைக்கு சுற்றுலா தொழிலில் மட்டும் இரண்டு கோடியே 31 இலட்சம் பேர் ஈடுபட்டுள்ளனர். சுற்றுலா மூலமாகவே பல்வேறு நாடுகளிலும் வெவ்வேறு தொழில்கள் வளர்ந்து வந்துள்ளன. இலங்கை உள்பட பல நாடுகளில், உணவுத் தொழில் செழித்து வளர, சுற்றுலா துறையும் ஒரு காரணம் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

சுற்றுலா என்பதை வரைவிலக்கணப்படி நோக்கின், தமது வழமையான இருப்பிடங்களை விட்டு வேற்று இடங்களைக் கண்டுகளிக்கப் பயணிப்பதே என்று பொருள் கொள்ளலாம். போக்குவரத்தும் தொடர்புத்துறையும் மேம்பட்டுவரும் இக்காலத்தில், சுற்றுலா துறையும் மேற்குறிப்பிட்ட துறைகளுடன் இணைந்த வகையில் வளர்ச்சி கண்டு வருகின்றது.


குறிப்பாக, வசதிபடைத்த மேற்குலக நாட்டினரும் ஜப்பானியரும் அதிகமாக சுற்றுலா செல்கின்றனர் என்றும் சிறந்த சுற்றுலா இடங்கள் நல்ல வருவாயை ஈட்டித்தருகின்றன என்றும் புள்ளி விவரத்தகவல்கள் எடுத்துக் காட்டுகின்றன.

வரலாற்று ரீதியாக இத்துறை பற்றி ஆராயும் போது, பண்க்கைகாலம் முதலே தீர்த்த யாத்திரை என்ற பெயரில் சுற்றுலா செல்வது இருந்துள்ளது. போக்குவரத்து, தொலைத்தொடர்பு. விருந்தோம்பல் துறைகள் போன்றன பழங்காலத்தில் விரிவு பெற்று இருக்கவில்லை. இதனால் பெரும்பான்மையானோர் தாம் பிறந்த கிராமங்களிலேயே தமது வாழ்க்கையைக் கழித்தனர். குடியேற்றவாதக் கொள்கை தலை தூக்கியதும் படைவீரர்கள், வணிகர்கள், சமய நோக்குடையோரும் தம்மிடத்தை விட்டுப் பிற இடங்களுக்கு செல்லவேண்டிய தேவை உருவானது.

வணிக விருந்தோம்பல் விரிவு பெற முன்னர், உணவுக்காவும் உறையுளுக்காகவும் வீடுகளுக்கு வரும் பயணிகளுக்கு உணவளித்து இடமளிப்பது பண்பாக இருந்தது. குறிப்பாக சமயப் பெரியார்களுக்கு உணவளிப்பது சிறந்த பேறாக கருதப்பட்டது. செல்வந்தர்கள் மடங்களை கட்டி, அங்கு வழிப்போக்கர்களுக்கு உணவும் தற்காலிக தங்குமிடமும் தந்துதவினர். இந்த மடங்கள் பலவற்றில் சாதி அமைப்பு பேணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

நவீன காலத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்காக பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஹோட்டல், உணவு, பானங்கள் உட்பட இத்தியாதி ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படுகின்றன. இயற்கை வனப்பு, காடுகள், வனாந்திரம், வன ஜீவராசிகள், பறவைகள், கடற்கரைகள், சுண்ணக் கற்பாறைகள் (Corals), பளிங்குப் பாறைகள் (Crystala) மலைத்தொடர், நீர்வீழ்ச்சி, மாணிக்கம், தோட்டங்கள், பூஞ்சோலைகள், அழிபாடுகள் (Ruins) என்பன பிரதான சுற்றுலாச் சொத்துகள் ஆகும்.

சுற்றுலாவுக்கு, இரண்டு அம்சங்கள் முக்கியமானவை: ஒன்று, நேரம் மற்றையது பணம் என்று பசுபிக் ஏசிய பிரயாண சங்கத்தின் தலைமைப் பதவியிலிருந்து இளைப்பாறிய லக்ஷ்மன் ரத்தனபால கூறுகின்றார். நேரம் உள்ளவர்களிடம் பணம் இல்லை; பணம் உள்ளவர்களிடம் நேரம் இல்லை என்றும் மிகச் சிலரிடமே இரண்டும் உண்டு. ஆனால், உயர்மட்ட செல்வத்தை அடையும் அநேகமான நாடுகளிலேயே இந்த இரண்டும் அதிகரித்து வருகின்றன என்றும் அவர் தெரிவித்திருந்தார்.



உலகிலேயே மிக வேகமாக வளர்ந்துவரும் சுற்றுலா பிராந்தியமென வர்ணிக்கப்படும் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில், அநேகமானோர் வறுமையிலிருந்து விடுபட்டு, நடுத்தர வர்க்கத்தில் இணைந்து கொள்கிறார்கள். இந்தப் புதிய செல்வந்தர்கள், இயல்பாகவே விடுமுறையில் வெளிநாடு செல்வோருடன் இணைந்து கொள்கிறார்கள். இவ்வாறாக பிரயாணம் ஒரு விரிவடையும் அம்சமாக இருக்கிறது. இந்த அம்சம், ஒரு பழக்கமாகத் தோன்றி பின்னர் நடுத்தர வர்க்கத்தினரின் ஒரு வாழ்க்கைப் பாணியாக வளர்ச்சி அடைகிறது.

கடந்தவருட உலகளாவிய பொருளாதார நெருக்கடி சுற்றுலாத் துறையை பாதிக்கிறது என்று சியோல் சுற்றுலா நிறுவனம் ஜூன் மாத ஆரம்பத்தில் தென் கொரியாவில் நடத்திய மூன்று நாள் சர்வதேச சுற்றுலா மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. வடகிழக்கு மற்றும் தென்கிழக்கு நாடுகளுக்கு சீன, ஜப்பான் சுற்றுலாப் பயணிகள் உலக பிரயாணத்துறையை மாற்றியமைத்து விட்டனர். கடந்த 15 வருட காலத்தில், எங்குமே புதிய மத்திய வகுப்பினர் தோன்றி உலக பிரயாண முறைமையை மாற்றியமைத்துவிட்டார்கள்.

நவீன இந்தியாவில் மத்திய வகுப்பினர் தொகை 300 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. அமெரிக்காவின் மொத்த சனத்தொகையிலும் பார்க்க இது அதிகமானது. ஆனால், சீனாவின் மத்திய வகுப்பினர் தொகை இதிலும் அதிகமானது.

ஆசிய பசுபிக் பிராந்திய நாடுகள் அதிக வளங்களைப் பெறுவதால் பிராந்தியத்திற்குள்ளான பிரயாணங்கள் தொடர்ந்தும் விருத்தியடையும் என்பதும் தெரிவிக்கப்படுகிறது. பொதுவாக உலக நாடுகளின் சுற்றுலாத்துறையின் ஆசியாவுக்குள் பிரயாணங்கள் அதிகரிக்கலாம் என்பதும் பொதுவான எதிர்பார்க்கையாகும்.

மூன்றாம் உலக நாடுகளில் சுற்றுலா பெரும் வருவாய் ஈட்டித்தரும் துறையாகப் நோக்கப்பட்டாலும் பல கேடுகளையும் செலவுகளையும் கொண்டுள்ளதையும் அவதானித்தல் வேண்டும். எனவே சுற்றுலாத்துறை வருமானத்தை ஈட்டித்தரும் அதேவேளை சுற்றாடலுக்கு அது அச்சுறுத்தலாகவும் அமைகிறது. சுற்றுலாவுக்கு அடிப்படையானது சுற்றாடலாகும். திட்டமில்லாத, கட்டுப்பாடில்லாத சுற்றுலா, சுற்றாடலில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

ஹோட்டல் கழிவுகள், நீர்மாசமடைதல், சட்டவிரோத குடிசைகளும் விடுதிகளும், சுண்ணக்கற்பாறை அகழ்வு போன்றன சுற்றாடலைப் பாதிக்கின்றன. இதைவிட மறைமுகமாக சுற்றுலாத்துறையுடன் சங்கமித்துள்ள பாலியல் சுற்றுலா, கடற்கரைச் சிறுவர்கள், போதைவஸ்து பாவனையும் கடத்தலும், அந்நியரின் அரைநிர்வாணப்பவனி, கசினோ சூதாட்டம் என்பன பௌதீகச் சுற்றாடலை மட்டுமன்றி பண்பாட்டுச் சூழலையும் சீரழிக்கின்றன.

இலங்கை, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் பாலியல் சுரண்டலில் ஈடுபடவதற்காவும் பல வெளிநாட்டு பயணிகள் வருகின்றார்கள். ஏழைச் சிறுவர்கள், பெண்கள் என பலர் இவ்வாறு இழிவான முறையில் சுரண்டப்படுகின்றார்கள். மேற்குநாடுகள் இவற்றைக் கட்டுப்படுத்துவதில்லை. இவை குறித்து அரச கட்டுப்பாடுகளும் சமூக விழிப்புணர்வும் அவசியமாகும்.

இது வரை ஆராய்ச்சியாளர்களை மட்டுமே விண்ணுக்குச் சுமந்து சென்ற ரொக்கெட்டுகள் சுற்றுலாப் பயணிகளைச் சுமந்து செல்லத் தயாராகி வருகின்றன. இந்தத் திட்டம் நடைமுறைக்கு வரும் நாள் வெகுதூரத்தில் இல்லை. விண்வெளிப் பயணம் செல்ல ஒரு பயணிக்குத் தேவைப்படும் நூறு மில்லியன் டொலர்களைச் செலுத்தி, கனவுப் பயணம் செல்ல விரும்பும் பயணிகள், முன் பதிவு செய்து கொள்ள முடியும்.

கொவிட்-19 சாவால்களுக்கு மத்தியில், சுற்றுலாத்துறையை தூக்கிநிறுத்த, அரசாங்கம் பல வழிகளில் முயன்று வருகின்றது. சுற்றுலாப் பயணிகளைக் கவர பல சலுகைகளை நடைமுறைப்படுத்தியும் வருகின்றது. எதிர்காலத்தில் நிலைமை முன்னேற்றமடைய உள்ளூர், வெளயூர் சுற்றுலாப் பயணிகள், மீண்டும் புதுஉத்வேகத்துடன் சுற்றுலா செல்வதற்குத் தருணங்களை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். நாமும் சுற்றுலாத் துறை ஈடேற எம்மாலான பங்களிப்புகளை வழங்குவோம்; சுற்றுலாப் பயணிகளை மதிப்போம்.









# வழமைக்குத் திரும்பின

கொரோனா தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் விதமாக நாட்டில் அமல்படுத்தப்பட்டிருந்த தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நேற்று (01) அதிகாலை 4 மணியுடன் தளர்த்தப்பட்ட நிலையில், நாட்டின் பல பகுதிகள் இவ்வாறு காணப்பட்டன.




























விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் சனிக்கிழமை, 02 ஒக்டோபர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.